Registered as a News Paper
பொழிவு 23
குவிப்பு 03
பக்கங்கள் 16
விலை 40/-
ஜூன் 2020

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Center, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 118 / News / 2020"

# காலத்தின் தேவை அறிந்து செயல்படுவோம்

## -மன்னார் மறைமாவட்ட ஆயர்-




இறை இயேசுவின் இனிய நாமத்தில் அன்பு வாழ்த்துக்களையும் செபத்தோடு கூடிய ஆசீர்வாதங்களையும் மன்னா வாசகர்களாகிய இறைமக்கள் உங்களுக்கு வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் கொரோனா வைரஸ் கோவிட்-19 தொற்று அடையாளம் காணப்பட்ட நாள் முதல் இன்றுவரை சுகாதாரப் பிரிவின் சட்ட விதிகளுக்கமைவாக பங்குத்தந்தையர்களின் வழிகாடுத்தலில் ஆன்மீக காரியங்களை முன்னெடுத்து வந்துள்ளீர்கள். தொடர்ந்து இக் கொரோனா வைரஸ் தொற்றுநோய் அதிகரித்து செல்லுகின்ற வேளையில் காலத்தின் தேவை அறிந்து சூழ்நிலைகளுக்கு அமைவாக எமது சமய, சமூக, பொருளாதார வாழ்வை அமைத்துக்கொள்வது கட்டாய தேவை என்பதை உணர்த்துகின்றேன் என மன்னாப் பத்திரிகைக்கு வழங்கிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த மாதம் இலங்கை ஆயர்மன்ற கூட்டத்தின் ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கத்தோலிக்கத் திருஅவையின் ஆலயங்களில் இறைமக்களின் பங்களிப்போடு பகிரங்கமாக வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை ஆயர்மன்றம் சார்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆயரால் முன்னெடுக்கப்பட்ட கோவிட் – 19 விசேட வழிபாடுகள்





பரவிவரும் கோவிட்-19 தொற்றுக்கிருமியின் தாக்கம் காரணமாக வழிபாட்டு ஸ்தலங்களில் மக்கள் ஒன்றுகூடி வழிபாடுகளை மேற்கொள்வது தவிர்க்கப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் இறைமக்களின் ஆன்மீக தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் ஒலிபெருக்கி வசதி இருக்கின்ற ஆலயங்களில் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்கவும் இறைமக்கள் அனைவரும் தமது இல்லங்களில் இருந்த வண்ணம் ஒலிபெருக்கி மூலமாக நடைபெறும் திருப்பலிகளில் பங்கு பெறவும் முயற்சிகளை முன்னெடுக்குமாறு அனைத்து பங்குத்தந்தையர்களிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அத்துடன் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளாரின் வழிபாட்டு ஒழுங்கமைப்பின் கீழ் மறைமாவட்டத்தின் சில முக்கிய ஆலயங்களில் விசேட பரிந்துரை திருப்பலிகளும், திருவிழா திருப்பலிகளும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் ஊடக அனுசரணையுடன் (Mannar Catholic Media மற்றும் Arudkadal முகப்புத்தகங்களுடாக) நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

➡15

# அன்பிய அலுவலகப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு. D.P.F.ஞானப்பிரகாசம் ஆயரால் கௌரவிக்கப்பட்டார்



மன்னார் திருஅவைக்கு கடந்த 25 ஆண்டுகளாக அயராது அளப்பெரிய பணிகள் புரிந்த திரு.D.P.F.ஞானப் பிரகாசம் அவர்கள் சுகவீனம் காரணமாக 2020ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி அலுவலக பணிகளிலிருந்து ஓய்வு பெற்றார். அலுவலக பணிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் அன்பிய மத்தியகுழுவில் இணைந்து அன்பியப் பணிகளில் ஈடுபடுவார். இவர் கடந்த 2020.05.06 அன்று எமது மன்னார் மறை மாவட்ட ஆயர் தந்தை அவர்களால், குருமுதல்வர், அன்பிய இயக்குனர் மற்றும் சில குருக்களின் பிரசன்னத்தில் மன்னார் ஆயர் இல்லத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார். திரு.D.P.F. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள் துறவறத்தார் மற்றும் அன்பிய இயக்குனர், அன்பிய பணியாளர்கள், இறைமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் 1995ம் ஆண்டில் எமது மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் அன்பியம் என்ற வாழ்க்கை முறை அடித்தளம் இடப்பட்டு அருள்மாரி, அருள்ஊற்று என்று விழிப்புணர்வு பெற்று இன்று அன்பியமாக வளர்ந்திருக்கின்றது.

ஒவ்வொரு பங்கிலும் 1995ம் ஆண்டில் இருந்தே அன்பிய வாழ்கைமுறை இயங்கி வருகிறது. 1999ம் ஆண்டு அன்பியம் ஒரு தனி ஆணைக்குழுவாக மறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு, இதற்கென தனியாகவே ஒரு அருட் தந்தையை இயக்குனராக நியமித்து அன்பிய ஆணைக்குழுவின் பணிகள் இடம்பெறுகின்றன.

# 90வது அகவை காணும் அருட்பணி.J.B. தேவராஜா



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூத்த குரு அருட்பணி. J.B.தேவராஜா அடிகளார் 16.06.2020 அன்று தனது 90வது பிறந்த தினத்தை நன்றியோடு நினைவு கூருகின்றார். பாசமுள்ள எம் மூத்த தந்தை அவர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், அருட் பணியாளர்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா மனமார்ந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

# மன்னா பத்திரிகையின் உத்தியோகபூர்வ இணையத்தளம்- www.manna.lk

மன்னா பத்திரிகையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.manna.lk தற்பொழுது முழு வடிவத்தில் உங்கள் பாவனைக்கு உள்ளது. கத்தோலிக்க செய்திகள் அனைத்தையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள ஆவண செய்யப்பட்டுள்ளது. சிறப்பாக மறைமாவட்டம், இலங்கை, வத்திக்கான், உலக திருஅவை சார்ந்த செய்திகள், ஆக்கங்கள், விளம்பரங்கள், அறிவித்தல்கள், போட்டிகள், புத்தகங்கள், பாடல்கள், பாடசாலை கத்தோலிக்க திருமறை மற்றும் கிறிஸ்தவ நாகரீக பாடத்திட்டங்கள், விசேட திருப்பலிகள் என்பவற்றை இங்கு பார்வையிட்டு பயன்பெற முடியும். மேலும் மன்னா பத்திரிகையின் முழு வடிவத்தையும் உங்கள் கையடக்க தொலைபேசியில் செயலியாக (App) தரவிறக்கம் செய்து சந்தாதாரராக இணைந்துகொள்ள எதிர்பார்த்திருங்கள்.

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்கமாக வழிபாடுகள் நடாத்த அனுமதி
## மன்னார் ஆயர் இறைமக்களுக்கு வழங்கிய ஆலோசனை கடிதம்

**எனது அன்பார்ந்த அருட்தந்தையரே, அருட்சகோதர சகோதரிகளே, அருமையான மக்களே,**

எங்களுக்கு ஒரு சில மக்களோடு திருவழிபாடுகள் நிறைவேற்ற அரசாங்கத்தினால் தரப்பட்ட அனுமதிக்காக நாங்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு நன்றி கூறுகின்றோம்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆனி மாதம் 12ம் திகதி தொடக்கம் மீளவும் நாங்கள் ஒரு குறிப்பிட்ட இறைமக்களுடன் (50 பேருக்கு குறைந்த மக்கள் தொகையுடன்) திருப்பலி நிறைவேற்ற அனுமதி உண்டு. கொரோனா தொற்றுநோயானது தொடர்ந்தும் மக்களைப் பாதிக்கும் நிலையில் இருப்பதால் அரசாங்கம் எங்களுக்கு வழங்கியிருக்கும் சில சுகாதார வழி முறைகளையும் இலங்கை ஆயர் பேரவை வழங்கியிருக்கும் பின்வரும் பரிந்துரைகளையும் கடைப் பிடிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

1. எமது ஆலயங்களுக்கு உட்பிரவேசிக்கும் முன் ஒவ்வொருவரும் சவர்க்காரமிட்டு கைகளை கழுவி சுத்தம் செய்து கொள்ளவேண்டும்.
2. ஆலயங்களுக்குள் இருக்கும் முழு நேரமும் முகக்கவசம் அணிந்திருத்தல் அவசியம். தூய நற்கருணை பெறும் நேரத்தில் மாத்திரம் அதைக்களைந்து அதன் பிறகு அதனை மீளவும் அணிந்துகொள்ளல் வேண்டும். திவ்விய நற்கருணை வழமைபோல் வழங்கப்படலாம். இக்காலகட்டத்தில் மட்டும் யாராவது கையில் திவ்விய நற்கருணையைப் பெற விரும்பினால் அதை அவர்கள் தகுந்த மரியாதையுடன் பெற்றுக் கொள்ளலாம்.
3. மக்கள் ஆலயங்களுக்குள் வந்து தனித்தனியாக செபிக்கக்கூடியதாக ஆலயங்கள் திறந்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் இடையிலான தகுந்த (சமூக) இடைவெளியானது பேணப்படல் வேண்டும்
4. கடந்த ஆனி 12ம் திகதி தொடக்கம் மக்கள் ஒருகிழமைக்கு ஒரு தடவை திருப்பலியில் பங்குகொள்ளும் விதத்தில் பங்குகளில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
5. அன்பியங்களின் ஊடாக ஒரு திருப்பலிக்கு 50ற்கு குறைவுபட்ட மக்கள் இருக்கும் வகையில் ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும்.
6. ஒரு நாளிலே இரண்டு அல்லது மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கலாம். ஒரு பங்கில் இரண்டு அல்லது மூன்று அருட்பணியாளர்கள் பணிபுரியும் பட்சத்தில் அதற்கு தகுந்த விதத்தில் திருப்பலிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.
7. இப்படியான ஒரு சூழ்நிலையிலே கத்தோலிக்க மக்கள் கட்டாயமாக ஞாயிறு திருப்பலிகளில் தான் பங்குகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை, அதை அவர்கள் இவ்வளவு காலமும் தொலைக்காட்சி மற்றும் இணையத்தளங்கள் ஊடாக நிறைவேற்றிய விதத்தில் தொடரலாம்.
8. இக்காலகட்டத்தில் பொதுவாக ஆசிநீர் பாவனையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
9. 50ற்கு குறைவுபட்ட மக்கள் கூட்டத்துடன் அன்பிய வழிபாடுகளை ஒவ்வொருவருக்கும் இடையிலான தூரத்தை பேணி நடத்தலாம்.
10. மற்றும் பக்திசபைக் கூட்டங்களையும் அவ்விதத்திலே நடத்தலாம்.
11. சிறப்பாக ஆடி மாத மடுமாதா திருவிழா 02ம் திகதி தொலைகாட்சி மற்றும் மறைமாவட்ட இணையத்தினூடாகவும் நீங்கள் பார்வையிடலாம்.

வேறு விடயங்கள் இருப்பின் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்துவில் பற்றுள்ள,
மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ
மன்னார் ஆயர்.

# நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்

## அமரர்.அருட்பணி. அவிதப்பர் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர்.அருட்பணி. சவிரி விக்ரர் அவிதப்பர் அடிகளார் இறைபதம் எய்திய 05ம் ஆண்டு நிறைவு தினத்தை (2015) யூன் மாதம் 22ஆம் திகதி நினைவு கூருகின்றோம்.

## அமரர்.அருட்பணி. நோபேட் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர். அருட்பணி. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் இறைபதம் எய்திய 11ம் ஆண்டு நிறைவு தினத்தை (2009) யூன் மாதம் 20ஆம் திகதி நினைவுகூருகின்றோம்.

# குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்பணியாளர்கள்



அருட்பணியாளர்
பி.கிறிஸ்துநாயகம்
27.04.2020



அருட்பணியாளர்
அலெக்ஸ்சாண்டர் சில்வா
25.04.2020



அருட்பணியாளர்
எம்.ஜெயபாலன்
27.04.2020



அருட்பணியாளர்
கி.அந்தோனிதாஸ் டலிமா
27.04.2020

குருத்துவ பணி வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் பி.கிறிஸ்துநாயகம், எம்.ஜெயபாலன், கி.அந்தோனிதாஸ் டலிமா (27.04.2020), அலெஸ்சாண்டர் சில்வா (25.04.2020) ஆகியோரை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கிறது. இறையாசீர் பெற்று வாழ நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

# துயர் பகிர்கின்றோம்

**திருமதி. லோறன்ஸ் ஞானம்மா**

மாந்தைப் பங்கைச் சேர்ந்த அருட்பணி. ஞானாதிக்கம் அடிகளாரின் அன்புத்தாயார் அமரர்.திருமதி. லோரன்ஸ் ஞானம்மா அவர்கள் கடந்த 14.03.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**திரு. சல்வதோர் அமலநாதன்**

அடம்பன் பங்கைச் சேர்ந்த அருட்பணி. சவுல்நாதன் அடிகளாரின் அன்பு சகோதரர் அமரர்.திரு. சல்வதோர் அமலநாதன் அவர்கள் கடந்த 16.04.2020 அன்று இறைபதமடைந்தார்.

**திருமதி. மரியதாஸ் சூசையம்மா**

கீளியன்குடியிருப்பு பங்கைச் சேர்ந்த மன்னா பத்திரிகை விநியோகஸ்தர் மீனா என அழைக்கப்படும் அமரர். திருமதி. மரியதாஸ் சூசையம்மா அவர்கள் கடந்த மாதம் இறைபதமடைந்தார்.

இவர்களது பிரிவால் துயருறும் உறவினர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் இவர்களின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் அமைதியடைய வேண்டி செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி 2020

## ஜூன்

**17.** புனித அந்தோனியார் திருவிழா - பாலைபெருமாள் கட்டு, சிறுகட்டு (செல்பெட்டி), ஆச்சிபுரம், கூமாங்குளம், தீவு (வஞ்சியன்குளம்)
**18.** புனித அந்தோனியார் திருவிழா - பண்டியன்கட்டு
- திரு இருதய ஆண்டவர் திருவிழா - இருதயபுரம்
**19.** புனித பிரான்சிஸ்கு சவேரியார் -சவேரியார்புரம் - புனித அந்தோனியார் திருவிழா -கோவிற்குளம், பலகை முனை, ஸ்ரேசன்
**20.** புனித அந்தோனியார் திருவிழா - சௌத்பார்
-அருட்பணி.நோபட் அடிகளாரின் நினைவு தினம் (2009)
**21.** பாப்பரசர் தினம் 22. புனித அந்தோனியார் திருவிழா - முதலியார்குளம், பன்றிக்கெய்தகுளம், மூன்றாம்பிட்டி, பண்டிவிரிச்சான், சாவற்கட்டு.
- அருட்பணி.விக்ரன் அவிதப்பர் அடிகளாரின் நினைவு தினம் (2015) 23. நற்கருணை ஆண்டவர் - யோசப்வாஸ் நகர், கீரி - குழந்தையேசு திருவிழா - செம்மண்தீவு - அன்புக் கன்னியர் அருட்சகோதரிகள் விழா - மடுத்திருப்பதியின் ஆடி திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம் -திருஇருதய ஆண்டவர் விழா பரிகாரிகண்டல், மூன்றாம்பிட்டி
**24.** சதாசகாய அன்னை ஆலயம் - கோதண்டர் நொச்சி குளம் - திரு இருதய ஆண்டவர் திருவிழா - கவயன்குடியிருப்பு
-அருட்பணி. அன்றூசேப்கா அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (1982)
**25.** திரு இருதய ஆண்டவர் பெருவிழா - சின்னக்குளம், காயக்குடியிருப்பு, கவயன்குடியிருப்பு - புனித அந்தோனியார் திருவிழா - குருக்கள் புதுக்குளம்
**28.** திரு இருதய ஆண்டவர் விழா - வேப்பங்குளம் - புனித அந்தோனியார் - பணிகர் புளியங்குளம், மரக்காரம்பளை - புனித சதாசகாய அன்னை ஆலயம்- கோதண்டர் நொச்சிகுளம்
**29.** புனித இராயப்பர் திருவிழா - உயிலங்குளம், முறியாகுளம் - திரு இருதய ஆண்டவர் விழா - விளக்குவைத்தகுளம் (ஓமந்தை)

# திருக்குடும்ப சபையின் யூபிலி நிறைவில் மனமார வாழ்த்துகின்றோம்

போர்டோவின் திருக்குடும்ப கன்னியர் சபை தனது 200வது யூபிலி ஆண்டை கடந்த 28.05.2020 ஆம் திகதியன்று நிறைவு செய்து ஆண்டவருக்கு நன்றி சொல்லுகின்ற வேளையில் மன்னார் மறைமாவட்ட இறை சமூகமாக திருக்குடும்ப கன்னியர் துறவற சபை துறவிகளின் வாழ்வு, பணி, சாட்சியம் ஆகியவற்றால் இறை விசுவாசத்தை பெற்றுக் கொண்டமைக்காக மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கிறது.

# மறைமாவட்ட பணிமாற்றம்

அருட்பணி. பிரான்சிஸ் அசிசி அடிகளார்
கண்டி தேசிய குருத்துவ கல்லூரியில்
விரிவுரையாளராக
மன்னார் மறைமாவட்ட ஆயர்
அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# உண்மை உறைக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சி கருத்தமர்வு



திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சி கருத்தமர்வானது கடந்த 07.02.2020 (வெள்ளி) தொடக்கம் 09.02.2020 (ஞாயிறு) வரை இடம்பெற்றது. இப் பயிற்சி கருத்தமர்வை நெறிப்படுத்த வளவாளராக திருகோண மலை மறைமாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் இயக்குனர் அருட்பணி. சேவியர் றஜீவன் அடிகளாரும், அவரது குழுவினரும் வருகை தந்திருந்தனர். முதல் நிகழ்வாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும், அருட்பணி. சேவியர் றஜீவன் அடிகளாரும் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். பின்னர் குருமுதல்வர் அவர்களினால் திருத்தந்தையின் கொடியும், அருட்பணி. றஜீவன் அடிகளாரினால் திருப்பாலத்துவ சபை கொடியும் ஏற்றி வைக்கப்பட்டன. அதன் பின்னர் ஆரம்ப செபத்துடன் இப்பயிற்சிக் கருத்தமர்வு ஆரம்பமானது.

இப்பயிற்சிக் கருத்தமர்வில் 84 திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். இந்நிகழ்வின் இறுதி நாளாகிய 09.02.2020 அன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். ➡ 15

## கொவிட் 19 மனிதநேயப் பணிகள்

# மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தில் நிவாரணப்பணிகள்



இலங்கையின் ஏற்பட்ட கொரோனா வைரஸ் காரணமாக மன்னாரில் 17,500 குடும்பங்கள் நாளாந்த உழைப்பை நம்பி சீவிப்பதாக அரசாங்க அதிபர் அறிவித்தமைக்கு இணங்க உலர் உணவுப்பொருட்களை ம.து.ம.ச சுமார் 1000 குடும்பங்களுக்கு கடந்த ஒரு மாதத்தில் வழங்கி வந்துள்ளது.

06.04.2020ல் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 500 குடும்பங்களுக்கும் ம.து.ம.ச நிதியிலிருந்து 510,000 ரூபாய் செலவு செய்துள்ளது. மேலும்75 குடும்பங்களுக்கு ம.து,ம.ச காரியாலயத்தில் வைத்து 60,000 ரூபாய் செலவில் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டது. அத்துடன் நோர்வே நன்கொடையாளர் நிதிப்பெற்று 14.04.2020 தொடக்கம் 20.04.2020ம் திகதி வரை தோட்டவெளியில் 25 குடும்பங்களுக்கும், தலைமன்னாரில் 25 குடும்பங்களுக்கும், முசலி பிரதேச செயலகப்பிரிவில் 100 குடும்பங்களுக்கும், ம.து.ம.ச உதவிப்பெறும் உயர் தரக்கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கும் ரூபாய் 200,000 செலவு செய்துள்ளது. ➡ 15

# இறுவட்டு, நூல் வெளியீடு





"மன்னார் மாதோட்ட வாசகப்பா, நாடக மெட்டுக்கள் (பாகம் 01)" ஒலிப்பதிவு இறுவட்டு, நூல் ஆகியன கடந்த 29.02.2020 அன்று நானாட்டானில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், பேராசிரியர் திரு. சி.மௌனகுரு அவர்களும் கலந்து கொண்டனர்.

அருட்பணியாளர்கள் அன்புராசா, தமிழ்நேசன் ஆகியோர் இம்முயற்சியில் பாரிய பங்காற்றியிருந்தனர். பல கலைஞர் களின் ஆதரவோடும், பலரின் உதவியோடும் இந்த இறுவட்டும் நூலும் தொகுத்து தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது. ✱

# அமதிகளின் யாழ் மாகாண முதல்வராக அருட்பணி. இயூஜின் அமதி



யாழ் மாகாண அமலமரி தியாகிகள் துறவற சபையின் புதிய மாகாண முதல்வராக அருட்பணி. இயூஜின் அடிகளார் அச்சபையினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது பணி சிறக்க மூவொரு இறைவனின் நல்லாசீரும், எம் மருதமடு தாயாரின் சிறப்பு பரிந்துரையும் என்றும் துணை நிற்க ஆசித்து, மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கிறது✱

## வாழ்வுதயத்தின் மனிதநேய பணிகள்



கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக அனைத்து மக்களும் தமது அன்றாட வாழ்க்கையை மிகவும் சிரமத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வேளையில் மன்னார் மறைமாவட்டத்தின் கரிற்றாஸ் வாழ்வுதயம் ஆனது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கியுள்ளது. மன்னார் மாவட்ட அரச அதிபருடைய பணிப்பின் பேரிலே மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற பிரதேச செயலாளர்களுடைய ஒத்துழைப்புடன் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் இரண்டாம் கட்டமாக இந் நிவாரணப் பணியானது மன்னார் மறைமாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து பங்குகளுக்கும் பங்குத்தந்தையர்களுடாக வழங்கப் பட்டது. இவ் நிவாரணமானது ஆரம்பத்திலே தனிமைப் படுத்தப்பட்டிருந்த குடும்பங்களுக்கு ரூபாய். 1400 பெறுமதியான பொருட்களும் தனி நபர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ரூபாய் 700 பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டன. ➡ 15

# திரு.எஸ்.செபஸ்ரியான் "கலைஞர் சுவதம்" வழங்கி கௌரவிக்கப்பட்டார்



ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் ஊடாக 10 கலைஞர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப உதவிகளும் "கலைஞர் சுவதம்" என்ற பெயரில் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. அவ்வகையில் முருங்கன் மறைக்கோட்டத்திற்கு உட்பட்ட சிலாவத்துறைப் பங்கைச் சேர்ந்த திரு.S. செபஸ்ரியன் அவர்களுக்கு கடந்த டிசம்பர் மாதத்தில் "கலைஞர் சுவதம்" வாழ்த்து வழங்கப்பட்டது.

கொழும்பு பத்தரமுல்லவில் உள்ள கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் "இந்த மனித தேசத்தின் கலை மற்றும் கலாசாரத்தினை மிளிரச் செய்யும் பொருட்டு உங்களால் ஆற்றப்படும் சேவைக்கு எமது கௌரவமான வாழ்த்துக்கள்! அமைதியான, ஒழுங்கான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட புனிததேசத்தை ஒன்று சேர்ந்து கட்டி யெழுப்புவதற்காக எம்முடன் கைகோர்த்துள்ள திரு.S.செபஸ்ரியன் என்கின்ற அன்பான கலைஞரே, மென்மேலும் இந்தத் தேசத்திற்கு சேவையாற்ற உங்களுக்கு அதிஷ்டம், பலம், ஆரோக்கியம் ஆகியன கிட்டுவதாக!" என்னும் வார்த்தைகள் பொறிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட்டது. ➡ 15

# பொதுநிலையினர் குடும்ப நல பணியகத்தின் மனிதநேயப் பணிகள்.



கடந்த சில மாதங்களாக உலகத்தையே மிரட்டிக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்றுக்கிருமியின் தாக்கம் நம் நாட்டையும் விட்டு வைக்கவில்லை. இந்த வைரஸ் தொற்றினால் முழு நாடும் ஸ்தம்பிதமடைந்து இருக்கின்றது. ஊரடங்கு சட்டம் காரணமாக மக்கள் அனைவரும் வீடுகளுக்குள் முடங்கி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மக்களுடைய நாளாந்த வாழ்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பல தாராள உள்ளத்தினர் நிவாரணப்பணிகளை செய்து வருகின்றனர். ➡ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# உலக இளையோர் தினம் - 2020

ஒவ்வொரு புதிய மைல் கல்லையும் நாம் அடையும் வேளையில் புதிய தொடக்கத்தை உருவாக்க கடவுளாலும், இவ்வுலக வாழ்வாலும் நமக்கு சவால்கள் விடப்படுகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோருக்கு எழுதியுள்ள ஒரு மடல் வழியே அழைப்பு விடுத்துள்ளார்.

**துணிகரச் செயலாற்ற விழையும் இளையோர்**


பயணங்களை மேற்கொள்வது, புதிய இடங்களையும், மக்களையும் கண்டுபிடிப்பது, புதிய அனுபவங்களைப் பெறுவது ஆகியவற்றில் இளையோர் தேர்ந்தவர்கள் என்பதை தன் மடலின் தொடக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துணிகரச் செயலாற்ற இளையோர் கொண்டிருக்கும் இந்த மனநிலையை கருத்தில் கொண்டு 2022ம் ஆண்டு உலக இளையோர் நாள் நிகழ்வுகள் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் ஏற்பாடு செய்யப்படுகிறது என்று கூறியுள்ளார். 15 மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் லிஸ்பன் நகரிலிருந்து இளையோர் பெரும் எண்ணிக்கையில் அதுவரை அறியப்படாத நாடுகளுக்கும், அங்குள்ள மக்களுக்கும் இயேசுவின் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள சென்றனர் என்பதை திருத்தந்தை இளையோரிடம் நினைவுபடுத்தியுள்ளார்.

**2020, 2021 மற்றும் 2022 இளையோர் நாள் மையக் கருத்துக்கள்**

''மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்" (லூக். 1:39) என்ற சொற்கள், 2022ம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலக இளையோர் நாளுக்கென தெரிவு செய்யப்பட்டிருக்கும் மையக்கருத்து என்பதை தன் மடலில் நினைவுறுத்தியுள்ள திருத்தந்தை அதற்கு முந்தைய இரு ஆண்டுகளில் அதாவது 2020ம் ஆண்டு ''இளைஞனே நான் உனக்கு சொல்லுகிறேன் எழுந்திடு" (லூக்.7:14) என்ற சொற்களையும், 2021ம் ஆண்டு, ''எழுந்து நில், நீ கண்டது பற்றி சான்று பகர, சாட்சியாக உன்னை ஏற்படுத்தினேன்" (தி.ப-26:16) என்ற சொற்களையும் இளையோருடன் இணைந்து சிந்திக்க தான் விழைவதாக இம்மடலில் கூறியுள்ளார்.

**"இளைஞனே, எழுந்திடு"**

நயீன் என்ற ஊரில் கைம்பெண்ணின் மகனை இயேசு உயிர்ப்பிக்கும் புதுமையில் ''இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திடு" என்ற சொற்களைப் பயன்படுத்தி உள்ளார் என்பதை தன் மடலில் சுட்டிக்காட்டும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கனவுகள், நேர்மறை உணர்வுகள், தாராள குணம், உற்சாகம் ஆகியவற்றை நாம் இழந்திருந்தால் நம் முன்னே இயேசு நின்று தன் உயிர்ப்பின் வல்லமையால் நம்மையும் எழுந்து நிற்கப் பணிக்கிறார் என்று "கிறிஸ்து வாழ்கிறார்" என்ற திருமடலில் (எண் 20) தான் கூறியுள்ள கருத்தை இம்மடலில் மீண்டும் நினைவுபடுத்தி உள்ளார். நயீன் நகர வாசலில் தன்னை நோக்கி வந்த ஒரு கூட்டத்தில், துயருற்றிருக்கும் கைம்பெண்ணை இயேசு



அடையாளம் கண்டு, அவரது துயரத்தைத் துடைத்தார் என்பதை இந்நிகழ்வில் காண்கிறோம் என்று குறிப்பிட்ட திருத்தந்தை, நாம் எவற்றைக் காண்கிறோம்? எவை நம் உள்ளங்களைத் தொடுகின்றன? என்ற கேள்விகளை எழுப்பியுள்ளார்.

**இளையோர் சந்திக்கும் நிகழ்வுகளில்...**

நாம் வாழ்வில் சந்திக்கும் நிகழ்வுகளில் அந்நிகழ்வை நம் செல்லிடப்பேசிகளில் பதிவு செய்து அதை மற்றவர்களோடு பகிர்வதில் நம் பெரும்பாலான நேரமும், சக்தியும் வீணாகின்றது என்ற கவலையை வெளியிட்டுள்ள திருத்தந்தை, குறிப்பாக வாழ்வை குறைக்கவும், இழக்கவும் செய்யும் நிகழ்வுகள் நடக்கும் வேளையில் வாழ்வை மீண்டும் கொண்டுவர நாம் என்ன முயற்சிகள் மேற்கொள்கிறோம் என்ற கேள்வியை விடுத்துள்ளார். துயரம் நிறைந்த சூழல்களில், ஒரு சில இளையோர் தங்கள் வாழ்வையும் பணயம் வைத்து அத்துயரினை நீக்க முன்வருவதையும், வேறு சிலர் நம்பிக்கை இழந்து அத்துயரத்தில் மூழ்குவதோடு, ஒரு சிலர் தங்கள் உயிரையும் இழக்க முடிவு செய்வது வேதனை தருகிறது என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மடலில் வெளிச்சமிட்டு காட்டுகிறார்.

**இறந்துபோன இளைஞனின் உருவகம்**

நயீன் நகர இளைஞன் இறந்த உருவகத்தைப் பயன்படுத்தி இன்றைய இளையோர் மனத்தளர்ச்சி, போதைப்பொருள் பயன்பாடு, குற்றம் புரியும் குழுக்களில் இணைதல் என்ற வெவ்வேறு வழிகளில் இறந்து போனதைப் போல் வாழ்ந்து வருவதை திருத்தந்தை இம்மடலில் வருத்தத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார். பரிவு கொண்டு இயேசு கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்தார் என்பதை குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோர் பலரும் பரிவினால் உந்தப்பட்டு மக்களின் துயரங்களில் தங்களையே ஈடுபடுத்திக் கொள்வதை பெருமையுடன் கூறியுள்ளார்.


**நாமனைவருமே, நயீன் இளைஞன்**

லூக்கா நற்செய்தியில் கூறப்பட்டுள்ள இந்நிகழ்வில், அந்த இளைஞனின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதை தன் மடலில் நினைவுறுத்தும் திருத்தந்தை, அந்த இளைஞனாக நாம் ஒவ்வொருவரும் நம்மையே உருவகித்து, நம்மை நோக்கி இயேசு கூறும், "இளைஞனே, எழுந்திடு" என்ற உயிர் தரும் சொற்களை நாமும் கேட்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். இயேசுவின் தொடுதலாலும், கட்டளையாலும் "இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கியதைப் போல்" (லூக். 7:15) நாமும் துணிவுடன், நம்பிக்கையுடன் பேச முடியும் என்றும், அவ்விதம் பேசுவதால் நாம் புதிய உறவுகளை உருவாக்க முடியும் என்றும் திருத்தந்தை இம்மடலில் எடுத்துரைத்துள்ளார்.

**தாயிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞன்**

உயிர் பெற்றெழுந்த இளையவரை இயேசு அவரது தாயிடம் ஒப்படைத்ததைப்போல், இன்றைய இளையோரை அன்னை மரியாவிடம் நான் ஒப்படைக்க விழைகிறேன் என்று இம்மடலின் இறுதியில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அந்த அன்னையின் பரிந்துரையால் இறந்திருக்கும் உலகம், திருஅவை, நம் வாழ்வு அனைத்தும் வாழ்வு பெறவேண்டும் என்று தன் மடலை நிறைவு செய்துள்ளார். *

# பிலிப்பைன்ஸ் நாட்டில் உலகின் உயரமான கன்னி மரியாளின் சுரூபம்




ஏறக்குறைய 100 மீட்டர் (315 அடி) உயரத்தில் உள்ள இந்த சிலை புகழ்பெற்ற மற்றும் சமீபத்தில் இறந்த ஆக்கபூர்வமான பிலிப்பைன்ஸ் சிற்பி எட்வர்டோ டி லாஸ் சாண்டோஸ் காஸ்ட்ரிலோ வடிவமைத்த, "ஆசியாவின் தாய்" என்ற மரியன்னை நினைவுச்சின்னம், ''அமைதி கோபுரம்" என்றும் அழைக்கப்படுகிறது, இது மான்டே மரியாவில் அமைந்து உள்ளது.

அதாவது, "மேரிஸ் மவுண்ட்" பிலிப்பைன்ஸில் உள்ள படங்காஸ் நகரில் யாத்திரை செய்யும் இடம். பிலிப்பைன்ஸில் கிறிஸ்தவத்தின் 500வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக 2021ஆம் ஆண்டில் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது அனைத்து ஆசியாவின் தாயும், உலகின் மிக உயரமான கன்னி மரியாவின் சிலையாகவும் இருக்கும் என எதிர்பார்கப்படுகின்றது.*

## திருத்தந்தையின் புதிய நூல் ''பெண்களின் திருத்தந்தை"




பெண்களை அருள்பணியாளர்களாக திருநிலைப்படுத்துதல் பெண் தியாக்கோன்கள் என்ற தலைப்புக்களில் திருத்தந்தையிடம் பல்வேறு தருணங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் கொடுத்த விளக்கங்களை இத்தாலியில் செய்தியாளராகப் பணியாற்றி வரும் Nina Fabrizio என்ற பெண்மணி "பிரான்சிஸ் - பெண்களின் திருத்தந்தை" என்ற பெயரில் புதிய நூலாக வடிவமைத்து உள்ளார்.

இந்நூலை கடந்த மார்ச் மாதம் திருத்தந்தை தன் தலைமைப் பணியில் 7 ஆண்டுகளை நிறைவு செய்யும் நாளின் நினைவாக புனித பவுல் பதிப்பகம் வெளியிட்டு உள்ளது. *

# புனித பூமியில் 800 ஆண்டுகள் பழமையான நூல்கள்

எருசலேமில் பிரான்சிஸ்கன் துறவற சபை இல்லம் 1217ஆம் ஆண்டில் அச்சபையை ஆரம்பித்த அசிசிநகர் புனித பிரான்சிசால் புனித பூமியின் மாநில இல்லமாக உருவாக்கப் பட்டது. இவ் இல்லத்தில் இருக்கின்ற 800 ஆண்டுகள் பழமையுடைய இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான உருவப்படங்களுள்ள உண்மையான கருவூலங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் புதிய திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று புனித பூமியின் பொது நூலக இயக்குனர் அருட்பணி. லியோனெல் கோ அவர்கள் கூறியுள்ளார். மேலும் அச்சபையின் பொது நூலகத்திலுள்ள பழமையான ஆயிரத்திற்கும் அதிகமான தொகுப்புகளை இணையதளத்தில் அனைவரும் பார்ப்பதற்கும் வாசிப்பதற்கும் உதவியாக முயற்சிகள் மேற்கொள்ளவதுடன் கடந்த காலத்தை பேரார்வத்துடன் நினைவில் வைத்திருப்பதற்காக மட்டுமல்ல வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில் இந்த நூல்களை வருங்காலத்திற்காகப் பாதுகாப்பதற்காகவும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பழங்கால கையெழுத்துப் பிரதிகளையும், நூல்களையும் பாதுகாப்பது அதன் பொருளடக்கத்திற்கு மட்டுமல்ல யூத-முஸ்லிம் உலகோடு கலாச்சார பரிமாற்றத்திற்கும் முக்கியமானது என்றும் தெரிவித்துள்ளார்.*

# மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக திருப்பீடத்தின் குரல்

திறனற்றவர்கள் என சமூகத்தால் கருதப்படுகின்றவர் களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்ற போதிலும் அவர்களின் வாழ்வை மதிப்பது குறித்து, சமுதாயத்தில் நிலவும் எதிர்மறைக் கண்ணோட்டம் பெரும் தடையாக உள்ளது என திருப்பீடப் பிரதிநிதி பேராயர் இவான் யுர்கோவிச் ஐ.நா. அவைக் கூட்டத்தில் உரையாற்றினார்.

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்களில் நடைபெறும் கூட்டங்களில் திருப்பீடத்தின் பிரதிநிதியாகச் பங்கேற்கும் பேராயர் யுர்கோவிச் அவர்கள் திறமையற்றவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் அனைத்து விதமான உரிமைகள் குறித்து ஐ.நா. அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.

இன்றைய உலகம் மாற்றுத் திறனாளிகளின் மனிதாபிமான மற்றும் ஆன்மீக வளங்களை நோக்காமல் அவர்கள் சமூகத்திற்கு வழங்கும் பங்களிப்பை மனதில்கொண்டு, அவர்களை ஓரங்கட்டப்பட்ட மக்களாக நோக்கும் மனநிலை குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

மனிதனின் மாண்பு கருவில் உருவானது முதல் இயற்கை மரணம் வரை மதிக்கப்பட வேண்டும் மற்றும் மருத்துவ அக்கறையும் காட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். மாற்றுத்திறனாளிகள் பிறப்பதற்கே தகுதியற்றவர்கள் என்ற நோக்கத்தில் கருக்கலைத்தல்கள் அனுமதிக்கப்படுவது குறித்தும், கருணைக்கொலைகள் குறித்தும் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்ட பேராயர் மாற்றுத் திறனாளிகள் அல்லது திறனற்றோர், வாழ்வில் உயிரூட்டத் துடன் பங்கு பெறுவதற்குரிய தடைகள் அகற்றப்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.*

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா சிறப்புப்பக்கம்

# கொரோனா வைரசின் தேடலின் போது இனம் காணப்பட்டமை

திரு.சின்கிலேயர் பீற்றர்.
ஆய்வாளர்/ஆலோசகர், மன்னார்.

உலகில் பல்லாயிரம் ஆண்டுகளாக பல நோய்கள் தோன்றி மறைந்துள்ளன. இவற்றில் ஒரு சில நோய்கள் தொடர்ந்து நிலவி வருகின்றது. ஒரு சிலவற்றை ஒழிக்க மாற்று மருந்துகள் உலகில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒரு சில மருந்துகளுக்கு ஒவ்வாமை, எதிர்ப்பு சக்திகள் உருவாகின. இதனால் ஒரு சில நோய்கள் குறைந்த அளவில் நிலைத்து நிற்கின்றன. ஆனால் அவைகள் பெரியதாக



காணப்படுவதில்லை.

உதாரணமாக - Leprecy, காசநோய்(T.B) போலியோ, கொலரா, மலேரியா, அம்மைநோய், பொக்கலிப்பான், சின்ன அம்மை, டெங்கு, HIV, சிக்கன்குனியா போன்றன ஒரு சில நாடுகளில் தீவிரமாகவும், குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா, அரபு நாடுகளில், ஒரு சில நாடுகளில் குறைந்தளவிலும் குறிப்பாக ஐரோப்பியா, அவுஸ்திரேலியா நாடுகளிலும் காணப்படுகின்றது.

இதே வரிசையில் கொரோனா, Covid- 19 என்னும் புதிய வகை வைரசும் தற்போது இணைந்துள்ளது. பல நாடுகள் இதை ஒழிப்பதற்காக அல்ல கட்டுப்படுத்துவதற்காக மருந்துகளை பயன்படுத்துகின்றன. 2020ம் ஆண்டு கொரோனா நோயை கண்டு உலகமே பயப்படும் அளவிற்கு முதல் தடவையாக உலகில் அனைத்து நாடுகளிலும் அவசரகால நிலைமை, ஊரடங்கு சட்டம், மக்களை தனிமைப்படுத்தல் போன்ற தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் 2025ல் இக்கொரோனா நோய்க்கான மருந்து கண்டுப்பிடிக்கப்பட்டு, ஏனைய மேற்குறிப்பிட்ட நோய்கள் போன்று சகல வைத்தியசாலைகளிலும் சிகிச்சையளிக்கப் படுமென எதிர்பார்க்கின்றோம். கடந்த 06மாதகால கொரோனா கட்டுப்பாட்டின் போது உலக நாடுகளில், நாளாந்த 3வகையான தரவுகளை உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டு வருகின்றது.

ஒரு நாட்டில் கொரோனாவினால் இறப்பவர்களின் தொகை, கொரோனா நோய் காரணம் PCR சோதனையினால் உறுதி செய்யப்பட்டவர்களின் தொகை, நோய் அறிகுறிகள் காணப்பட்டு பின்பு சுகமடைந்தவர்களின் தொகை, போன்ற சகல தகவல்களும் ஊடகங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் கடந்த கால ஆய்வின் படி சிக்கன்குனியாவினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களின் தொகையில் 40% மானவர்களுக்கு 3-5 ஆண்டுகளின் பின் சிக்கன்குனியாவின் பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளது அவதானிக்ககூடியதாக உள்ளது. ஆசியாவில் பலர் கை, கால், கழுத்து, இடுப்பு மற்றும் முள்ளதண்டு போன்ற பகுதிகளில் எலும்பு நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு இவற்றில் 5% இறந்தும் உள்ளனர். மேலும் 40 வயதிற்கும் மேற்பட்ட வயோதிப ஆண்கள் 69% மானோர் காணப்படுகின்றனர். இதில் சிக்கின்குனியாவினால் 5% பாதிக்கப்பட்டு இறந்ததை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. தற்போது கொரோனா வைரசினால் 60% ஆண்களும், 35% பெண்களும், 5% சிறுவர்களும் பாதிக்கப் பட்டுள்ளதாக ஊடகங்கள் அறிவிக்கின்றன. இப்படி இருக்கையில் தற்போது கொரோனா பாதிக்கப்பட்டு விடுவிக் கப்பட்டவர்களுக்கு மீண்டும் இந்நோய் வராது என்பதற்கும், பக்க விளைவு ஏற்படாது என்பதற்கு விஞ்ஞானரீதியில் எதிர்வு கூறப்படவில்லை, காரணம் தற்போது கொரோனாவிற்கு 06 மாத வயதாகின்றது. இதன் பக்க விளைவு எதிர்வு கூறல் 3-5 ஆண்டுகள் காலப்பகுதி காணக்கூடியதாக இருக்கும். ஆனால் நமது சக்திக்கு ஏற்ப சில சுகாதார நடைமுறைகளை அரசாங்கம் சட்டத் திட்டங்களாக அறிவிக்கவேண்டும். அரசியல் தலைவர்களே இது உங்கள் சிந்தனைக்கு...

எமது தேடலின் மூலம் சகல மக்களும் இனி எதிர்காலத்தில் விஞ்ஞான முறைப்படி உலக சுகாதார ஸ்தாபனத்தின் சட்டங்களுக்கு அமைய தகுந்த முகக்கவசம் அணிதலும், இவற்றை சிறியவர் தொடக்கம் முதியவர்கள் வரை கட்டாயம் அணிந்திருத்தல் வேண்டும். சில சமயம் தேவை ஏற்படும் போது வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கும் (நாய், பூனை) முகக்கவசம் அணிவித்தல். அத்துடன் நோய் பரவுவதற்கு காரணமாகவும், ஊடகமாகவும் உள்ள விலங்குகளான பாம்புகள், எலிகள், வௌவால்கள், ஏனைய ஊர்வன போன்றவற்றை உணவிற்கு பாவிப்பதை குறைத்தல் அல்லது தவிர்த்தல். இதை சட்டமாக்குவது அவசியம்.

வாகனங்களில் சிறப்பாக துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் , திறந்த ஆட்டோ, மாட்டு வண்டில், ரிக்சா வண்டி போன்றவற்றில் சன சந்ததி மிக்க தெருக்களில் முதியவர்களும், சிறியவர்களும் பிரயாணம் செய்வதை குறைத்தல். ஏனெனில் உலகில் காற்றின் 20% அளவு கரியமில வாயுவினாலும், $(Co_2)$ ஏனைய விவசாய, கைத்தொழில் போன்ற நச்சு வாயுக்களாலும் கலக்கப்பட்டு நடமாடும் பிரயாணிகளுக்கு குறைந்த ஆயுளை ஏற்படுத்துகின்றது. இதன் போது முகக்கவசம் தேவை என்பது புலனாகின்றது. முகக்கவசம் அணிவது அழகான பெண்களுக்கு ஆண்களின் இச்சை பார்வையிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. இருப்பினும் கெல்மட் அணிவதினால் பல கொள்ளை வழிப்பறி சம்பவங்களும் ஏற்படுகின்றது குறிப்பிடத்தக்கது. ஆகவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான மாற்று வழிகளை நடைமுறைப்படுத்துவது நலம். மேலும் முகக்கவசம் அணியும்போது ஒருசிலர் குறிப்பாக குழந்தைகள், வயோதிபர்கள் போன்றவர்களுக்கு சுவாசப் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. இதற்கு சுகாதார பிரிவினர் உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

நாம் காலையும், மாலையும் வெளி வேலைகளுக்கு செல்லும் போது மாத்திரம் கரங்களை நீரில் கழுவுவது வழமை. இருப்பினும் எத்தனை நபர்கள் வேலைகள் செய்த பின் கை கழுவாமல் சிற்றுண்டி, தேனீர், hotdogs உணவு வகைகள் சாப்பிடுவது உண்டு. உணவு சிற்றுண்டி சாலைகளில் கடமை புரிவோர் பலர் கை கழுவாமல், கையுறை அணியாமல், முகக்கவசம், தலை கவசம் அணியாமல் உணவு பொருட்களை வாடிக்கையாளருக்கு வழங்குவது எமது நாட்டில் அவதானிக்ககூடியதாக உள்ளது. சட்டங்கள் பல இருப்பினும் அதை அமுல்படுத்துவதற்கு பல சுகாதார உத்தியோகஸ்தர் ஆளணி குறைவு. உதாரணமாக ஒரு நாளில் ஒரு சாதாரண பிரஜை வீட்டிலிருந்து புறப்பட்டு மீண்டும் வீட்டிற்கு வரும் வரை, எத்தனை வீதமான காபனீரொட்சைட், நச்சு காற்றுக்கள், நுண்ணங்கிகள் போன்றவற்றை சுவாசிக்கின்றனர் என்பதற்கு ஓர் எடுத்து காட்டாக, உலகிலும் இலங்கையிலும் கடந்த 60 நாட்களாக நடைபெற்ற அவசரகால ஊரடங்குச்சட்ட வேளையில் தனிமையில் இருந்தபடியால் 70% மக்கள் வைத்தியசாலைக்கு சென்று தங்களது நோய்களுக்கு சிகிச்சையளிக்காமல் தமது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரித்து சுகமடைந்தது கண்கூடு. மேலும் நாளாந்த இறப்புவீதம் 60-70% குறைந்துள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் கற்கும் பாடம் என்னவெனில் சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை சனநடமாட்டம் உள்ள இடங்களில் குறிப்பாக பாடசாலைகள், மத ஸ்தலங்கள், சந்தைகள், பூங்காக்கள், கடற்கரைகள், வேலைத்தளங்கள், அழகு நிலையங்கள், சிகை அலங்கார நிலையம், தொழில் பேட்டைகள், சேமக்காலைகள் போன்றவற்றிற்கு செல்ல முன்பும், சென்று வந்த பின்பும் குறைந்தது 02 தடவையாவது கை, கால், முகம் கழுவுவது சட்டமாக்கப்பட வேண்டும். இவற்றை பாடசாலை பிள்ளைகளின் பாட விதானத்தில் உள்ளடக்கப்படவேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு ஒருவர் 4-5 தடவையாவது கை கழுவி பேணுவது அவசியம் ஆகம். இவற்றை முதலில் நகரத்திலும் பின் கிராமத்திலும் அதனை பின்பு மூலைமுடுக்குகளிலும் அமுல்படுத்துவது நகர பிதாக்களினதும், சுகாதார உத்தியோகஸ்தர்களினதும் கடமையாகும்.

மேலும் எமது தேடலில் போது நாம் வழமையாக கைகளையும், முகத்தையும் கழுவுவது போன்று ஏன் நமது பாதங்களையும், கால்களையும் கழுவதில்லை? ஏனெனில் அதன் முக்கியத்துவம் எமக்கு விளங்குவதில்லை. கடந்த 05 வருடங்களாக கால்கள் ஊனமுற்றவர்களுடன், பொய் கால்கள் போடும் ஸ்தாபனத்தில் கடமை புரிந்த அனுபவத்தில் இருந்து உங்கள் பாதங்களின் முக்கியத்துவத்தை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு நிமிடம் தரையிலிருந்து இரு கால்களின் பாதங்களை நீட்டி, முக கண்ணாடி முன் பாதங்களை பார்ப்பதற்காக வைத்து உங்கள் பாதங்களை அவதானியுங்கள். இவ்விரு பாதங்களும் உங்கள் வாழ்க்கையில் கடந்த பல ஆண்டுகளாக எவ்வளவு கிலோ மீற்றர் தூரத்திற்கு உங்கள் பாரத்தை தாங்கி நடந்திருக்கும். பல தெருக்கள், கிராமங்கள், பட்டினங்கள் பலநாடுகள், மலைகள், மேடுகள், பள்ளங்கள், கடல்கள், குளங்கள், புல்வெளிகள், மரங்கள், படிகள் என பல இடங்களில் ஏறி இறங்கியிருப்பீர்கள். இவ்வாறு உங்களது தற்போதைய வயது வரை ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரம் உங்களை தாங்கி நின்ற கால்களுக்கு நன்றி கூறவேண்டாமா? முக கண்ணாடியில் பாதங்களை பார்க்கும் போது எத்தனை பித்தவெடிப்புகள் எத்தனை ஆணிவேர் முலைகள், எத்தனை முள் குற்றிய தழும்புகள், புண்கள், வெட்டுகாயங்கள், நகச்சுற்று, செருப்பு, சப்பாத்து பட்டிகளினால் ஏற்படும் காயங்கள், போலியோ, விபத்து காயங்கள், விரல்கள், பாதங்கள் துண்டிப்பு போன்றவற்றை இக்கண்ணாடி மூலம் அவதானித்து உங்கள் நிலையை அறிந்துக்கொள்ளலாம். இதை கருத்தில் கொண்டு தான் நம் முன்னோர்கள் ''பாதபூஜை'' என கூறி பாதங்களை கழுவி துடைத்து, தீபம், தூபம் காட்டி எண்ணெய் தடவி வணங்கி வந்த சம்பிரதாயம் தற்போது மருகி வருகின்றது. ஒரு சிலர் குளிக்கும் போது முகத்திற்கும், கரங்களுக்கும், மேல் உடம்பிற்கு எடுக்கும் கரிசனையை, கால்களுக்கு எடுப்பதில்லை. குளிக்கும் போது கூட கால்களை துப்பரவு செய்ய மறந்திடுவர்.


முற்காலங்களில் பாடசாலை சிறார்கள், குழந்தைகள் போன்றோர் பெற்றோர்கள், மத குருக்களிடமும், ஆசிரியர்கள் ஆசான்கள் போன்றவர்களின் கால்களை தொட்டு வணங்கி தமது கடமைகள் மேற்கொள்வர். ஏன் இயேசுநாதர் கூட தமது 12 சீடர்களின் பாதங்களை கழுவி துடைத்து முத்தமிட வில்லையா? தமிழ் கலாச்சார முறைப்படி வீடுகளில் நுழைவோரும், மத ஸ்தலங்களுக்கு நுழைவோரும் தமது பாதணிகளை கழற்றிவிட்டு உட்செல்வது அவதானிக்க வில்லையா? ஐரோப்பிய நாடுகளில் தமது குளிர் சுவாத்தியத்திற்கேற்ப வீடுகளுக்கு நுழையும் போது காலணி கழற்றி காலுறையுடன் உட்செல்வது அவதானிக்கப்பட்டு உள்ளது. எனவே 20,25,30,50,80 வருடங்களாக எமது வயதிற்கு ஏற்ப எம்மை சுமந்து சென்ற பாதங்களை சுகாதார முறைப்படி கவனித்து பாதுகாத்து அதற்கு நன்றி கூறுவோமாக.

மேலும் எமது தேடலின் போது, நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் தமிழர்கள், சிங்களவர்கள், மலேசியர், சிங்கபூர் தமிழர்கள் இரு கரங்களையும் குவித்து வணக்கம் செய்வது வழக்கம். இதன் முக்கியத்துவத்தை கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட காலம் தொடக்கம் உலக தலைவர்களும் சகல மக்களும் கடைப்பிடித்ததை நன்கு அவதானிக்கின்றோம்.

இம்முறையின் போது முடிந்தளவு முககவசம், கையுறையும் அணிந்து இரு விரிந்த குடைகளின் இடை தூரம் (01 மீற்றர்) இடைவெளிகளில் நின்று உரையாடுதல் நன்மை பயக்கும். ஒருசில ஐரோப்பிய, முஸ்லீம் நாடுகளில் கை குலுக்குதல், நெஞ்சோடு நெஞ்சு கட்டி தழுவுதலும் முகத்தில் முத்தம் கொடுத்தலும் உதட்டில், தலையில் முத்தமிடுதல் அவதானிக்கப்பட்டுள்ளது இதை தடைசெய்யவேண்டும்.

மேலும் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும், வாகனங்களில் செல்லும் போது குறிப்பாக பேரூந்து, கார், ஆட்டோ, புகையிரதம், விமானம் போன்றவற்றில் செல்லும்போது முடிந்தளவு இடைத்தூரம் விட்டு அமர்ந்திருப்பது நன்மை பயக்கும். இவற்றை நடைமுறைப்படுத்தும் போது போக்குவரத்து செலவுகள் அதிகமாக அதிகரிக்க கூடும். இதை பொது மக்கள் பொறுத்துக்கொள்ள முடியாமல் இருக்கும். இருப்பினும், இதற்கு அதிகாரிகள் சில நடைமுறைப்படுத்த கூடிய எளிய நடைமுறைகளை வெளியிடுதல் வேண்டும். சன நடமாட்டம் அதிகமுள்ள இடங்களுக்கு சிறுவர்கள், வயோதிபர்கள் முடிந்தளவு செல்வதை தவிர்தல் நலம். முடியுமான வரை இடை தூரத்தை கடைப்பிடிப்பதன் மூலம் எம்மை சுற்றி உள்ளவர்களிடமிருந்து தடிமல், காசநோய், கொரோனா, நெருப்புகாய்ச்சல் போன்ற கிருமிகள் காற்றிலிருந்து எமது உடம்பிற்கு செல்லாது இருப்பதை உறுதிப்படுத்தல்.

கொரோனா கற்று தந்த பாடத்தின் படி கீழ்க்கண்ட ஆறு தந்திரரோபாயங்களை கடைப்பிடிப்போமாயின் ஓர்



ஆரோக்கியமான சமூகத்தை எம் நாட்டில் உருவாக்கலாம்.

1. கையுறை, முககவசம் அணிதல்
2. முகத்தை, கைகளை, கால்களை முடிந்தளவு சவரக்கார மிட்டு கழுவுதல்
3. கை குவித்து வரவேற்றல்
4. முத்தம் கொடுத்தல், கட்டியணைத்தல், கை கொடுத்தலை தவிர்த்தல்
5. சன நடமாட்டம் உள்ள இடங்களில் இரு திறந்த குடைகள் தூரத்தில் (01 மீற்றரில்) நடமாடுவோம் அல்லது அமர்ந்து இருப்போம்.
6. முடிந்தளவு குடும்பத்தில் தனித்திருப்போம் தேவையற்ற பிரயாணங்களை தவிர்ப்போம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா சிறப்புப்பக்கம்

# “கொரோனாவைக் கண்டு அஞ்சாதீர்கள்”

## வைரஸை அடித்துத் துரத்துங்கள்

**1. வைரஸ் என்றால் என்ன?**

கண்ணுக்குத் தெரியாது, நுணுக்குக்காட்டி கொண்டு பார்க்க முடியும், தன்னை இனப்பெருக்கம் செய்ய மனிதர், விலங்கு, தாவரங்களின் உடலினுள் புகுந்து கொள்ளும். இவ்வாறான ஒரு நுண்ணுயிர் தான் இந்த வைரஸ்.

**2. வைரஸால் உண்டாகும் நோய்கள்?**

ஜலதோசம், HIV, சின்னம்மை

**3. கொரோனா வைரஸ் என்றால் என்ன?**

வைரஸ்களில் இது ஒரு தனிக்குடும்பம், தனி ரகமாக காணப்படும் இந்த கொரோனா வைரஸ் இனமானது கடந்த 2020ஆம் ஆண்டு சீனா, ஹாங்காங் பிரதேசங்களில் சார்ஸ் வைரஸ் என்றும், 2012ஆம் ஆண்டு அரபுநாடுகளில் மெர்ஸ் வைரஸ் என்றும், தற்போது 2019ஆம் ஆண்டில் சீனாவில் கோவிட் 19 என்ற பெயரில் இவ் வைரஸானது உருவாகி இருக்கின்றது. இந்த வைரஸானது எளிமையான நமது உடலில் புகுந்து கொள்ளும், பொதுமக்கள் கூட்டமாக இருக்கும் பொழுது தீவிரமாக பரவும். அதாவது வைரஸ் தாக்கமுள்ள ஒருவர் தும்மும் பொழுது அவரருகில் இருக்கும் பொருட்கள் மீது கிருமிகள் புகுந்து அதை வெறொருவர் தொடும் போது இவ்வைரஸ் பரவுகிறது.

**5. கொரோனா வந்தால் மரணம் நிச்சயமா?**

இல்லை 83% பாதிக்கப்பட்டவர்களுக்கு இது 3 நாட்களில் குணமடையும். அதாவது வைரஸ் உடலில் வந்தவுடன் காய்ச்சல், தும்மல், வறட்டு இருமல் இருக்கும். ஆனால் மூன்று நாட்களில் தானாக குணமடையும். பின்னர் எதிர்ப்பு சக்தி தொழிற்பட ஆரம்பிக்கும், மீதமுள்ள 17% ஆனவர்கள் மீதுதான் மருத்துவர்களின் முழு கவனமும் இருக்கின்றது. ஏனென்றால் மூன்று நாட்களுக்கு மேல் உடலில் தங்கியிருக்கும். ஆனால் 15% ஆனவர்களை முடிந்தவரை காப்பாற்றி விடுகின்றார்கள், மேலும் 2% ஆனவர்கள் தான் மருத்துவர்களுக்கு கடும் சவாலாக இருக்கின்றது. மரணம் நேரக்கூடியவர்களாக இருப்பவர்கள். அவர்கள் யாரெனப் பார்த்தால் 80 வயதிற்க்கு மேற்பட்டவர்கள், மற்ற வியாதிகளான சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் என்பன இருந்தால் இதனுடன் கொரோனா வைரசும் சேர்ந்து கொண்டு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. மரணம் தீண்டுகின்றது. ஆகவே கொரோனா வைரஸ் வந்தால் மரணம் நிச்சையமில்லை என்பதை புரிந்து கொண்டாலே பயம் விலகிவிடும்.

**6. எவ்வாறு இவ் வைரஸை அடித்து துரத்துவது, அதற்கான தற்காப்பு முறைகள் என்ன?**

வைரஸ் பாதிக்கப்பட்டவரிடமிருந்து குறைந்து 6 அடி தூரம் தள்ளி இருத்தல், கைகளை சுத்தமாக கழுவுதல் வேண்டும். 20 நிமிடம் சவர்க்காரமிட்டு கழுவுதல், 7 மணிநேரம் தூங்குவதால் நோய் எதிர்ப்பு சக்தியை கூட்ட முடியும். தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்ய வேண்டும், (மூச்சுவாங்க) விற்றமீன் C உணவுகளை அதிகம் சாப்பிடுதல். பாதிக்கப்பட்ட நாடுகளுக்குப் பயணம் செய்யாதிருத்தல், நன்றாக தண்ணீர் குடித்தல், மதுப் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ளல்.

**7. முகமூடி அணிவது ஏன்?**


வைரஸ் எமது உடலில் வந்தால் அது மற்றவர்களுக்குப் பரவாமல் இருப்பதற்காகவே முகமூடி அணிய வேண்டுமே தவிர முகமூடி போட்டுக் கொண்டால் வைரஸ் வந்துவிடாது வைரசிலிருந்து பாதுகாக்கவே நாம் முகமூடி அணிகின்றோம் ஏற்கனவே நமக்கு வைரஸ் வந்திருந்தால் மற்றவர்களுக்கு பரவாமல் இருப்பதற்காக.

கொரோனா வைரஸினைக் கண்டு பயப்படாதீர்கள். வந்தவர்கள் எல்லாரும் மரணமடைவது கிடையாது அதனை அடித்து துரத்துவதற்க்கு நடவடிக்கைகள் எடுங்கள்.

தந்தி தொலைக்காட்சி.

# கொரோனா வைரஸில் இருந்து எம்மை பாதுகாப்பது எப்படி

வைத்திய கலாநிதி. அஸ்வின் விஜய் - இந்தியா



**1. கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க செய்ய வேண்டியவை.**

கொரோனா வைரஸ் தும்மல் மூலமாகவும், இருமல் மூலமாகவும் தான் அதிகம் பரவுகின்றது. முதலாவதாக கைகளை நன்றாக கழுவுதல் முக்கியமானது. கொரோனா வைரஸ் இருப்பதனால் மட்டுமல்ல சாதாரண தடிமன் இருந்தாலே 20 நிமிடங்கள் கைகழுவ வேண்டும். நாம் தும்மும் போழுது மூக்கை மூடி தும்மும் பழக்கத்தை நாம் கொண்டு வரவேண்டும் 3 அடி தூரத்துக்கும் கூடுதலாக நாம் தும்மல் இருப்பவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும், முகக் கவசம் அணிய வேண்டும், சனக்கூட்டம் அதிகமான இடங்களுக்குச் செல்வதைக் குறைக்க வேண்டும் சாதாரணமான இருமலோ, ஜலதோசமோ இருந்தால் ஏனையவர்களிடமிருந்து விலகியிருப்பது அனைவருக்கும் நல்லது.

**2. அதனை கட்டுப்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள்.**

கொரோனா வைரஸ் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்களுக்கு பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. வயோதிபர்கள், குழந்தைகள், புற்றுநோய் உள்ளவர்கள், சக்கரை வியாதி உள்ளவர்கள் இப்படியான மக்களுக்கு பொதுவாகவே எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். அதனால் எதிர்ப்புச் சக்தி அதிகம் உள்ள உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். விற்றமீன் C அதிகமுள்ள உணவுகளை சாப்பிடுவதால் அவ்வகையான நோய்கள் பரவுவது குறைவாக இருக்கும். தோடம்பழம், கொய்யாப்பழம், தேசிக்காய், நெல்லிக்காய் இவற்றை உண்ணுவது மிகவும் நல்லது. பச்சைக்காய்கறிகள், கீரைவகைகள் சாப்பிட வேண்டும். அத்தோடு வெள்ளைச் சீனியையும், மதுவையும் குறைப்பது நல்லது.

**3. ஆயுர்வேதத்தின் மூலம் கொரோனா வைரஸை தடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள்.**

ஆயர்வேதத்தினால் கொரோனா வைரஸை தடுக்கக் கூடிய சாத்தியம் இருப்பதைவிட இயற்கை மூலிகைகளை பயன்படுத்துவதால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. ஆனால் கொரோனா வைரஸை தடுப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு.

**4. இறைச்சி உணவுகளைச் சாப்பிடுவதால் உள்ள பிரச்சினைகள்.**

கொரோனா வைரஸ் ஆனது வெளவாலில் இருந்து வந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறதே தவிர வெளவாலில் இருந்து தான் வந்தது என்று ஆதாரபூர்வமாக நிருபிக்கப்படவில்லை. எந்த வைரசும் நன்றாக சமைத்துச் சாப்பிடும் உணவுகளில் பரவும் வாய்ப்புக்கள் குறைவு. நன்றாக சமைத்து சாப்பிட்டால் இந்நோய் உணவுப் பழக்க வழக்கத்தால் பரவாது.

**5. இவ்வாறான வைரஸின் பாதிப்பு வீதம்**

கொரோனா வைரஸ்சானது பற்றிய கவனம் தேவை, ஆனால் அதற்காக பயப்படக் கூடாது. இதே போன்று 2002ல் சார்ஸ் வைரஸ் வந்தது. 2012ல் மெர்ஸ் வைரஸ் வந்தது. இவை எல்லாம் நுரையிரலைத் தாக்கி உயிரிழப்பை ஏற்படுத்தும் வைரஸ் தான். சார்ஸ் வைரஸ் மூலம் பாதிக்கப்பட்டால் 10% இறந்து விடும் நிலை காணப்பட்டது. மெர்ஸ் வைரஸ் மூலம் பாதிக்கப்பட்டால் 37% இறக்கும் வாய்ப்பு காணப்பட்டது. இப்பொழுது வந்திருக்கும் கொரோனா வைரஸ் 2-4% உயிர் பாதிப்பு இருப்பதால் அதிகம் பயப்பட தேவையில்லை *

# உலகத்தின் அடையாளம் கொரேனாவாம்

ஊர் உலகம் இதுதான் பேச்சு
சீனாவின் வுஹான் மாநிலத்தினில் பிறந்ததாம்!
உலகத்தின் அடையாளம் கொரோனாவாம் !
கலந்து விட்டது அதன் மூச்சு!
கொவிட்– 19 அதன் பெயராம்!
ஆட்கொல்லி உயிர் அதுவாம்!
வைரசுக்கு தலைவனாம்
பல மடங்கு கொடியதும் இதுவாம்!
சுவாச பாதையை வழிமறித்து
மூச்சு திணற வைத்திடுமாம்!
நுரையீரலினில் குடிகொண்டு
நிமோனியாவைத் தந்திடுமாம்!
முற்றினால் நமக்கு மரணமும் நிச்சயமாம்!
தொற்றி கொண்டாள்
விட்டு பிரிய மாட்டேன் – என்று
அடம் பிடிக்குமாம்
உயிர் கொல்லி கொரோனாவாம்!
வந்துவிட்டால் சிக்கி கொள்வோம்!
நாம் அனைவரும்
கொரோனாவிலிருந்து விடுபட...
சுயகட்டுப்பாட்டுடன்
சமூக இடைவெளியைப் பேணி
எம்மையும் சமூகத்தையும் காத்திட...
இறையருளை வேண்டி நிற்போம்!

அ. ஜெயநாயகம்
காத்தான் குளம், வட்டக்கண்டல், மன்னார்.

# செய்தி என்ன? இறைவா!

நீர் நீதியும் இரக்கமும் உள்ளவர் எந்த ஒரு செயற்பாட்டிலும்
நீர் வழங்கும் செய்தி ஒன்று இருக்கும் நிச்சயமாக!
“கொரோனா” வழியாய் நீர் விடுக்கும் செய்தி என்ன?
சமத்துவம் வலியுறுத்தப்படுகிறதா?
அரச பரம்பரை அன்றாடக் கூலிகள் அனைவரும் சமம்தான்
என்பது அறிவிக்கப்படுகிறதா? என் அரசின் முன்
“வல்லரசு” என்று ஒன்றுமில்லை என்பது வலியுறுத்தப்படுகிறதா?
வழிபாடுகளின் முக்கியத்துவம் உணரப்படல் உலகிற்கு
வழங்கும் அவகாசமா? வழிபாடு வாழ்வாக விடுக்கும்
வேண்டுகோளா? பள்ளிகளின் அவசியத்தை
உணர்வதற்காக இந்த நீண்ட விடுமுறை
இயற்கையை அன்பு செய்ய விடுக்கும் அறை கூவலா இது?
“இயற்கையை விட மனிதன் மேல்” என்கிற
அகந்தை அழிய வேண்டும் அப்படித்தானே?
களனி ஆற்று நீரை பரிசோதித்து வியந்து போய்
நிற்கிறார்களாம் ஆய்வாளர்கள்!
சுத்தமாக இருக்கிறதாம் கழிவுகள் கலக்காமல்!
காற்றுக் கூட சுத்தமாம் வாகனப் புகை இல்லாததால்
ஒட்டகமும், மாடுகளும், மான்களும் வீதிகளில்
சுதந்திரமாக ஊலாவர முழு மனித குலமும் வீட்டுக்குள்!
“ரோட்டில்” நடத்திய அராஜகங்களை யோசிக்கவா
இந்த வீட்டுச் சிறை?
மிருகங்களை மட்டுமல்ல மனிதர்களையே மோதிவிட்டு
ஓடுகின்ற வேகத்துக்கு போடப்பட்ட “பிறேக்கா”
இந்த ஊரடங்கு? கருக்கப்படுகின்ற குருத்துக்கள்!
கசக்கப்படுகின்ற மொட்டுக்கள்! இவ்வித
மிருகத்தனங்கள் முடிவு பெறவா இந்த
மரண அச்சுறுத்தல்? சமையலறையோடு
நெருங்கி வர சிக்கனத்தை தெரிந்து கொள்ள
சந்தர்ப்பமா இந்த முடக்கம்? அநாவசிய
ஆடம்பர கொண்டாட்டங்களுக்கு அறிவுரையா
இந்த “ பத்துப் பேர் கொண்டாட்டம்”? இயேசுவின்
அடக்கத்தை ஒத்ததான அவசரமான ஒரு சிலருடனான
அடக்கம் விடுக்கும் செய்திதான் என்ன?
ஒன்றாய் இருக்கவும் ஒன்றாய் பேசவும்
ஒன்றாய் உண்ணவும் ஒன்றாய் செபிக்கவும்
வழங்கப்பட்டதா இந்த கட்டாய ஓய்வு? இறைவா நீர்
வழங்கும் செய்திகளைப் புரிய முயல்கிறோம்.
இரக்கத்தின் தேவனே. இரங்கும் மன்னியும். காப்பாற்றும்
முழு உலகையும். ஆசீர் வதியும் அர்ப்பணிப்புடன்
சேவையாற்றும் அனைவரையும். சர்வ மதங்களும்
இணையட்டும் மனித குலம் விடுவிக்கப்படட்டும்
கொரோனாவின் “சாதனையாக” இவை அமையட்டும்.

ஜெயாபாலாஜி - முருங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கட்டுரை

# அரசியல் வாழ்வின் உரிமைகளும் கடமைகளும்

எம்.ஆர். பிறின்ஸ் டயல்
ஆசிரிய ஆலோசகர் (சமூக விஞ்ஞானம்)
மன்னார் வலயக்கல்வி அலுவலகம்.

அரிஸ்ரோட்டில் தனது அரசியல் என்ற நூலில் மனிதன் இயல்பாகவே ஓர் அரசியல் பிராணி என்று கூறுகின்றார். அரசியல் கல்வியினால் அறிவுடைய முதற்தரப் பிரஜைகள் தோன்றுகின்றனர். பிரஜைகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும், கடமைகளையும் நன்கு உணர்ந்து கொள்ள அரசியல் கல்வி உதவுகின்றது. உரிமைகளின் முக்கியத்துவத்தையும் கடமைகளின் அவசியத்தையும் உணர்ந்து வாழும் பிரஜைகள் நாட்டின் செல்வங்களாக கருதப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் தமது நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் உரிமையாகப் பங்குபற்றவும் மற்றவர்களை பங்குபெறச் செய்யவும் உதவுகின்றனர். மேலும் அரசு ஆற்றவேண்டிய கடமைகளையும் குறிக்கோள்களையும் மக்கள் தெரிந்து கொண்டு நாட்டின் அரசியலில் பங்குபெற முடிகின்றது. மக்களைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமையாகும். மக்களைக் காப்பாற்றுவது என்பது மக்களுடைய சுதந்திரத்தையும், வாழ்க்கையையும் காப்பாற்றுவது ஆகும். அதாவது மக்களுடைய உரிமைகளுக்கு பாதுகாவலனாக இருப்பது அரசாங்கமாகும். அரசாங்கம் தனது பொறுப்பை உணர்ந்து செயற்படாமல் போனால் அதற்கு அதன் பொறுப்பை உணர்த்துவது மக்களின் கடமையாகும்.

தனிமனித வாழ்வும் சமூகத்தின் வாழ்வும் வளம் பெற வேண்டும். நாடு ஒன்றுபட்டு முன்னேற்றம் காணவேண்டும். இதற்கான வழிவகைகளை வகுத்து இயக்கக்கூடிய வழி முறையே அரசியல் எனப்படுகின்றது. இந்த உயரிய குறிக்கோளை அடைய அரசில் வாழும் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை வாக்குரிமையின் வாயிலாகத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் நாட்டை ஆளும் அதிகாரத்தையும் பொறுப்பு களையும் ஒப்படைக்கின்றனர். மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சியே மக்களாட்சி என வரைவிலக்கணப் படுத்தினார் ஆபிரஹாம் லிங்கன். இது மக்களை கதாநாயகர் களாகக் கொண்டுள்ள ஆட்சிமுறை ஆகும். மக்களே எஜமானர்களாகவும் அவர்களுக்குப் பணிபுரிபவர்களே ஆட்சி யாளர்களாகவும் காணப்படுகின்றனர். இது மக்களுக்காக பணி செய்வதையே தனது கடமையாகக் கொண்டுள்ளது. மேலும் மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றிட செய்கின்றது. மக்களுக்கு பயன் தருகின்ற சட்டங்களை இயற்றுகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து அமைத்துச் சூழலை உருவாக்குகின்றது, நீதியை நிலை நாட்டுகின்றது. தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள இரண்டாம் குடியரசு யாப்பில் மூன்றாவது அத்தியாயத்தின் 10-14வது உறுப்புரை களில் அடிப்படை உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உறுப்புரை-10:- ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதத்திரம் சிந்தனை செய்யவும் மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் என்பவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

உறுப்புரை-11:- ஒவ்வொருவரும் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடாத்துதலுக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது.

உறுப்புரை-12:- சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் அத்துடன் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரித்துடைய வர்கள். எந்தவொரு நபரும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை, பிறப்பிட ரீதியாக வேறுபடுத்தப்படக் கூடாது.

உறுப்புரை-14:- ஒவ்வொரு பிரஜையும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், போதனையிலும், அனுசரிப்பிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம், பேச்சு சுதந்திரம், சொந்தக் கலாச்சாரத்தையும், மொழியையும் பயன்படுத்துவதற்கான சுதந்திரம், சட்டமுறையான தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்.

இது தவிர தேர்தல்களின் போது தமது வாக்குரிமையினைப் பயன்படுத்தும் உரிமை, நேரடியாகவும், சுதந்திரமாகவும் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் ஊடக வாக்குரிமையினாலும் அரசாங்கத்தை அமைக்கும் உரிமை. தாம் ஓர் பிரதிநிதியாக தேர்தலில் போட்டியி'டுவதற்கான உரிமை போன்றனவும் ஒரு பிரஜையின் அரசியல் உரிமையாக கொள்ளப்படுகின்றன. ஒரு நாடானது சிறந்த மக்களாட்சியை பின்பற்றுகின்ற நாடு என்பதற்கு சிறப்பான அளவுகோல் யாதெனில் அங்கு மக்களுடைய உரிமைகள் சிறப்பாகப் பின்பற்றப்படுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது.

ஆக மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் அவன் உரிமைகளோடு பிறக்கின்றான் என்ற கருத்தும் அறிஞர் ரூசோ கூறுவதுபோல மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் ஆனால் எங்கு அவன் அடிமைச் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கின்றான் என்ற கருத்தும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய தொன்றாகும். இது தவிர உரிமைகளை எதிர்பார்க்கும் நாம் உரிமைகளுடன் இணைந்த கடமைகளையும் நிறைவேற்றுபவர்களாகின்றோம். அவ்வாறு பொறுப்புக்களையும், கடமைகளையும் நிறைவேற்றுதலானது தமது உரிமைகளை மட்டுமல்லாது மற்றவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு வழிவகுக்கும். நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டத்திற்கு அமைவாக பிரஜைகள் நிறைவேற்ற வேண்டிய சட்டரீதியான கடமைகளும் காணப்படு கின்றன. சட்டத்தை மதித்தல், நாட்டு மக்களின் பாதுகாப்பு, தொற்றுநோய் பரவுவதை தடுக்கும் வகையிலான ஊரடங்கு சட்டத்தைக் கடைப்பிடித்தல், பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல், வரி செலுத்துதல், அரசியல் யாப்பைப் பாது காத்தல் இத்தகைய கடமைகளை உதாசீனப்படுத்தப்படின் சட்டரீதியான தண்டனைகளுக்கு உள்ளாக நேரிடுகின்றது. எமது மத குருக்களையும், துறவியரையும் மதித்தல், ஆசிரியர்களை கனம் பண்ணுதல், மூத்தோரைப் பேணுதல், எமது சமயத்தில் சமூகத்தில் காணப்படும் விழுமியங்களை மதித்தலும் அவற்றைப் பின்பற்றுதலும், சுற்றாடலைப் பேணல், சமூக அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல், வளங்களைப் பாதுகாத்தல், தவறான செயற்பாடுகளில் இருந்து சமூகத்தை மீட்டெடுப்பதும் ஒரு நற்பண்புள்ள பிரஜை ஒருவரின் கடமை ஆகின்றது. இத்தகைய பண்பாட்டு ரீதியிலான கடமைகளை நிறைவேற்றுதலானது ஒருவரது கௌரவத்திலும் மதிப்பிலும் சமூகம் அவரை ஏற்றுக் கொள்வதிலும் நேரடியாக தாக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

மேலும் இன்றைய காலங்களில் அரசியல் முதிர்ச்சியுள்ள ஜனநாயக நாடுகளில் அரசியல் கட்சிகளின் பணியும், அதன் உன்னதமான பங்களிப்பும் அவசியமாகின்றது. அரசியல் கட்சிகள் மக்களின் நலன்களுக்காகவும் முன்னேற்றத்திற் காகவும் செயற்படவே உருவாக்கப்படுகின்றன. அவை அரசியல் சமூகத்தில் சிறந்த ஆளுமைமிக்கத் தலைவர்களை அர்ப்பணிப்பான தலைவர்களை உருவாக்குவதற்கு செயற்பட வேண்டும். ஆனால் இலங்கை போன்று வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் தோற்றம் பெறுவது ஆரோக்கியமான அரசியல் சூழலை ஏற்படுத்தும் என்பதில் நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்துகின்றன. அவை மக்களை இன, மத, சாதி ரீதியாக பிரித்தாலும் தந்திரத்தையே கையாளுகின்றன. பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் மக்களை சந்தித்தல் மக்களிடையே நிவாரணப் பொதிகளையும் சில சில்லறைகளையும் வழங்குகின்றன. தங்களதும் தம்மைச் சார்ந்தோருடையவும் நலன்களுக்காக மட்டுமே செயற்படுகின்றன.

இக்காலங்களில் மக்கள் விழிப்புணர்வு உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். நல்ல அர்ப்பணிப்பான சமூக நோக்குடைய பிரதிநிதிகளை தெரிவு செய்தல் வேண்டும். மாறாக அற்ப சொற்ப சலுகைகளுக்காக தமது வாக்கினை விலை பேசுகின்றவர்களாக நாம் மாறிவிடக் கூடாது. ✱

# அரசியலும் திருஅவையும்

உரோமானிய ஆட்சி நிலவிய வரலாற்றுக் காலம் அது. அவர்களின் ஆட்சி உலகையே ஆதிக்கம் செலுத்திய காலம். உரோமையர்களின் அடக்குமுறை ஆட்சியில் யூதர்கள் சிக்கித் தவித்தனர். பல்வேறு வரிச் சுமைகளால் பாதிக்கப்பட்டனர். அத்தகைய சூழலில் அந்நியர்களின் ஆட்சியிலிருந்து தங்களை மீட்க மெசியா வருவார் என அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். காலம் நிறைவுற்ற போது. இறைமகன் இயேசு மாறுபட்ட தலைவராக புதிய தலைமைத்துவ பண்புகள் நிறைந்தவராக விளங்கினார். இயேசுவின் போதனைகளும் செயற்பாடுகளும் அக்கால அரசியல் சூழ்நிலைக்கு மாறுபட்டவையாக விளங்கின. இயேசு அப்பங்களை பலுகச் செய்தபின்னர் மக்கள் அவரை அரசராக்க முயன்றனர். ஆனால் அவரோ அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றதல்ல என்று இயேசு கூறினார். இயேசு கொண்டு வரவிருந்த வேறுபட்ட இறையரசை பின்வரும் நிகழ்வுகள் மூலம் கண்டு கொள்ள முடியும்.

➢ இயேசு ஒரு சிறந்த யூதக் குடிமகனாக விளங்கினார். (யோவான் 4:9)

➢ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு வழங்குவதையே தமது நோக்கமாக கொண்டிருந்தார். (யோவான் 18:23)

➢ எல்லா மக்களையும் சமமாக மதித்து அவர்களோடு சமபந்தியில் அமர்ந்தார். (மாற்கு 2:15-17)

➢ இறைவனது சாயலில் படைக்கப்பட்ட மனிதன் ஒவ்வொருவரும் மாண்பும் உரிமையும் உடையவன். எனவே இன, மத, சாதி, சமூகம் போன்ற பிரிவினைகளைத் தகர்த்தெறிந்தார் . (லூக் 10:25.37)

➢ விண்ணரசை வாழ்வின் அனுபவமாக கண்ட இயேசு காலம் நிறைவேறி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என முழக்கமிட்டார். (மாற்கு1:15)

➢ மனிதருக்கு கடவுள் தரவிரும்பிய நிறைவான உரிமை வாழ்வுக்கு இயேசு முக்கியத்துவம் கொடுத்தார். அதற்கு எதிரான மரபுகளைச் சாடினார். (மாற்கு 2:27)

மக்களின் வாழ்வோடு தம்மை இணைத்துக் கொண்டு உண்மை, நீதி, அன்பு ஆகிய நெறிகளில் மக்களை வழிநடத்த வரலாற்றில் ஓர் ஒப்பற்ற தலைவராக, இன்றைய தலைவர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டான பின்வரும் தலைமைத்துவ பண்புகளை இயேசு கொண்டிருந்தார்.

➢ சமூகத்தில் நிலவிய அநீதிகளையும், அக்கிரமங்களையும் கண்டித்தார். (லூக் 6:24)

➢ இயேசு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு வழங்குவதையே தமது இலக்காக கொண்டிருந்தார். (லூக் 4:18-19)

➢ மனித நேயத்துக்கு எதிராக நிலவிய எல்லா மரபு வழிகளையும் கடுமையாக எதிர்த்தார். (லூக் 13:10-17)

➢ தொண்டு ஏற்பதற்கு அல்ல: மாறாக தொண்டு ஆற்றுவதற்கே வந்தார். (மாற்கு 10:45)

➢ தம் பணிகளையும், தலைமைத்துவ பொறுப்பையும் தம் சீடர்களுக்குப் பகிர்ந்தளித்தார். (யோவான்21:1617)

➢ ஏழை எளிய பாமர மக்களைத் தேடிச் சென்றார். அவர்களுடைய ஏக்கங்களை தமதாக்கிக் கொண்டார். (மத்தேயு 4:23-25)

➢ மக்களுக்காக தம் உயிரயே கொடுத்தார். (யோவா 19:30)

அதன் அடிப்படையில் இன்றைய உலகில் திருச்சபை வேறு என்பதல்ல. நல்லதோர் ஆட்சியையும், அமைப்பையும் உருவாக்குவதில் பொது நிலையினரை ஊக்குவித்து வழிகாட்டப்பட வேண்டும். என இரண்டாம் வத்திக்கான் சங்கம் எமக்கு புதிய பார்வையை, தெளிவைத் தந்துள்ளன. ( காண்க 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள். இன்றைய உலகம் திருச்சபை.74:75)

➢ அரசியல் சமூகத்தில் தங்களுக்கு இருக்கும் தனிப்பட்ட அழைத்தலை கிறிஸ்தவ மக்கள் அனைவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

➢ குடிமக்கள் எவ்வித பாகுபாடுகளுக்கும் உட்படுத்தப் படாமல் சுதந்திரமாக ஆட்சியாளர்களை தெரிவு செய்வதில் வாய்ப்புக்களை தொடர்ந்து வழங்க வேண்டும்.

➢ தங்களுக்கு இருக்கும் வாக்குரிமையை சுதந்திரத்தோடு செயற்படுத்த எல்லா மக்களுக்கும் உரிமை மட்டுமல்ல. மாறாக அது அவர்களுக்கு கடைமையுமாகும்.

➢ திருச்சபை எந்தவொரு அரசியல் கொள்கை : அமைப்பிற்கு கட்டுப்பட்டதன்று. அரசு, சமூகம், திருச்சபை ஆகிய மூன்றும் தன்னாட்சி உரிமை கொண்டனவாகும். எனினும் இவை தங்களுக்குள் எந்தளவிற்கு ஒத்துழைக் கின்றனவோ அந்தளவிற்கு நன்மை விளையும்.

➢ கிறிஸ்தவர்கள் தங்களிடையே பொறுப்புணர்வை வளர்த்துக்கொண்டு பொது நலனுக்கு தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.

➢ அரசியல் கட்சிகள் தங்கள் சொந்த நலனை பொது நலன்களுக்கு மேலானதாக ஒரு போதும் கருதலாகாது.

கத்தோலிக்க திருச்சபையின் 2ம் பொதுச்சங்கத் தந்தையர்கள் அரசியல் அதிகாரமுடையோரை கேட்டுக் கொள்வது யாதெனில் : இம்மண்ணகத்திலே உறையும் மனிதரின் வாழ்வுக்கு பொறுப்புடையவரோடும். அரசியல் அதிகாரம் (உலகியல்) பெற்றுள்ளோர் அனைவரோடும் பேச விழைவதை அறிக்கை மூலம் பின்வருமாறு தெரிவிக்கின்றார். உங்களது அதிகாரத்திற்கும் தலைமை நிலைக்கும் மதிப்பளிக்கின்றோம். உங்களது பதவிக்கு மரியாதை அளிக்கின்றோம். உங்கள் நேர்மையான சட்டங்களை ஏற்றுக்கொள்கின்றோம். அச்சட்டங்களை இயற்றுவோரையும் அவற்றை நடைமுறைப்படுத்துவோரையும் உயர்வாக மதிக்கின்றோம். ஆனால் ஒரு தூய நற்செய்தியை உங்களுக்கு சொல்ல விழைகின்றோம். கடவுள் ஒருவரே பெரியவர் எல்லாவற்றிற்கும் முதலும் முடிவும் அவரே. உங்கள் அதிகாரம் அவரிடமிருந்தே வருகின்றது. உங்கள் சட்டங்களுக்கும் அடிப்படை அவர்தான். இம்மண்ணாலே மக்களிடையே ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்ட வேண்டியது உங்களது கடமை. ஆனால் பின்வருவனவற்றை மறுத்து விடாதீர்கள்.

இத்தரணியில் ஒழுங்கையும், அமைதியையும் நிலை நாட்டக் கூடியவர் அவரே ஏனெனில் அவரே மனித வரலாற்றை வழிநடத்துபவர் அவரொருவரே போர்களையும், இடையூறு களையும் பிறப்பிக்கும் தீய நாட்டங்களை மனத்திநின்று களைபவர். மனிதரின் உழைப்பையும், துன்பத்தையும் தூய்மைப்படுத்துபவர் அவர். உங்களால் வழங்க முடியாத மனமகிழ்வை மனிதருக்கு அளிப்பவரும் உங்களால் தணிக்க இயலாத துயரிலே அவர்களைத் தேற்றுபவரும் அவரே.

சமூகத்தில் கிறிஸ்து ஆற்றும் தூய்மைப்படுத்தும் பணிக்கு தடைசெய்யாதீர்கள். அவரை மீண்டும் சிலுவையில் அறையா தீர்கள். ஏனெனில் அவர் இறைமகனாய் இருப்பதனால் அவ்வாறு செய்வது கடவுளுக்கு செய்யப்படும் துரோகமாகும். நேர்மையும், சமூக அமைதியின் மீதும், முன்னேற்றத்தின் மீதும் நாட்டமுடைய நற்பிரஜைகளை, குடிமக்களை திருச்சபை உங்களுக்கு உருவாக்கித் தருகின்றது✱

எம்.ஆர். பிறின்ஸ் டயல்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியார் திருவிழா நல்வாழ்த்துக்கள்



வருடாவருடம் யூன் மாதம் 13ம் திகதி உலகெங்குமுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் புனித அந்தோனியாரின் திருவிழாவை மகிழ்வோடும் உற்சாகத்தோடும் கொண்டாடி வருகின்றனர். சிறப்பாக மன்னார் மறைமாவட்டத்தில் மட்டும் 45இற்கும் அதிக மான ஆலயங்கள் புனித அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டவை ஆகும்.

ஆகவே புனித அந்தோனியாரின் பெயர் கொண்ட திருவிழாவைக் கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் அவரின் நாமத்தில் அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களைச் சேர்ந்த அனைத்து இறை மக்களுக்கும் திருவிழா நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

## கல்விக் களத்தில் வெள்ளிவிழா நாயகன்

### திருவாளர் சந்தான்பிள்ளை மரியநாயகம் கொடுதோர்



கல்விப்புலத்தில் ஆசிரியனாக ஆங்கிலத்தில் பெற்ற புலமையால் கற்பிக்க வேண்டும் என்று உள்ளத்தே உதித்தெழுந்த வாஞ்சையினால் ஆசிரியப் பணியை ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு வவுனியா, பெரியகோமரசன்குளம் அ.த.கவிலும், வ/இலுப்பைக்குளம் (நேரியகுளம்) றோ.க.த.கவிலும், தொடர்ந்து இன்னும் சில பாடசாலைகளிலும் அதிபராக பணியாற்றி இன்று பிரதிஅதிபராகப் பணியைத் தொடர்கிறார்.


வவுனியா நெளுக்குளம் கலைமகள் ம.வி யில் கல்விக் களத்தில், ஈர்பத்தோடைந்தாண்டு சீரிய பணி ஆற்றி சிறப்புப்பெறும் செம்மனத்தான், ஏழையர் தோழன், சமூகப் பணியில் எல்லோரும் வாழ வழிசமைத்த எம் ஆசான் நலம்வாழ்க, நற்பணி சிறக்க, நல்லருள் நிறைந்து, நானிலம் நிலைபெற தொடரட்டும் உம்பணி...

"வாழ்த்துகின்றோம், வாழ்க வளமுடன்"

வாழ்த்துபவர்கள்: கல்வி கற்று உயர்வடைந்த மாணவர் சமூகம்.

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு

## பொன் விழா வாழ்த்து



திரு.திருமதி.
பீற்றர் குரூஸ்,
கிறிஸ்பி குரூஸ்

1970.06.17 – 2020.06.17



இறையாசி தனைக்கொண்டு இல்லறமாம் நல்லறத்தை
நிறைவுபெறு ஐபத்து ஆண்டுகளாய் - நெறியுடனே
அறமு மன்பும் திருமறையின் வழிவாழ்வும் பெற்றனரே
பீற்றரும் கிறிஸ்பியுமே..!

வாழ்த்துதும் வாழ்த்துதும் உளமார வாழ்த்துதுமே
சூழநின்று சுற்றங்கள் வாழ்த்துதுமே - பெருமையுறு
பே(ர்)சாலை பெற்றெடுத்த பெருமக்கள் வாழ்த்துதுமே
பாசமோடு பாமாலை சூடியே!

வாழ்த்துவோர்
மகள், மருமகன்,பேரப்பிள்ளைகள்,
சகோதரர் குடும்பத்தினர், உற்றார், நண்பர்கள்.

## 3வது பிறந்த நாள் வாழ்த்து



31.05.2020

செல்வன்.
மைக்கல் டொனேசன் மிதுஸ்றீகன்

பிறப்பின் நொடிகள்
என்றும் அழகானது அதை மீண்டும்
காலத்தின் நகர்வால் அடையும் போது
வாழ்த்துக்கள் மிகவும் அழகானவை
என்றும் நீ நலமுடன் வாழ
இறையாசீர்கள் வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
அம்மா, அப்பா மற்றும் உறவினர்கள்.

# நீங்காத நினைவுகள்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 | 13 |
| 05 | 06 |
| 1940 | 2015 |

### அந்தோனிப்பிள்ளை ஜோசப் சவுந்தரநாயகம்

அன்பும் இரக்கமும் உள்ள ஆண்டவரே! எம் குடும்பத்தின் குல விளக்காய் விளங்கிய எம் அன்புத் தந்தையை எமக்கு அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவரது கடமை இவ்வுலகில் முடிந்ததென்று அவரை உம் வீட்டிற்கு அழைத்துக் கொண்ட ஐந்து ஆண்டு நிறைவை இன்னும் அழியாக் கவலையுடன் நினைவில் கொண்டு உம்மை வேண்டுகின்றோம் அப்பா. அவரது இழப்பை நீர் பல வழிகளில் ஈடு செய்கிறீர் என்பதை நாங்கள் உணர்ந்து உமக்கு நன்றி கூறுகின்றோம் தந்தையே!. எம் அப்பாவின் ஆன்மா உம் இல்லத்தில் நிரந்தரமாக அமர்ந்து ஆறுதல் அடையவும் நாமும் ஒரு நாள் அவருடன் சேர்ந்து உமக்கு நன்றிப்புகழ் பாடவும் அருள்கூர வேண்டுமென்று எம் அப்பாவின் 5 ஆண்டு மறைவு நினைவின் வேண்டுதலாக உம்மைத் தயவுடன் கேட்கின்றோம் தந்தையே!

ஆமென்.

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 31 |
| 09 | 05 |
| 1943 | 2014 |

### திருமதி. ரெஜினா நீக்கிலாப்பிள்ளை


(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)

"உயிருள்ள வரை உம்மை நேசித்தோம், இறந்த பின்னும் உம்மை மறவோம்"

அம்மா என்றால் அன்பு, அன்பு என்றால் அம்மா - உம்
கருவறையில் எமை சுமந்து அவனியிலே எமை பெற்றெடுத்து
உம் அரவணைப்பிலே எமை காத்து உம் பட்டினியாலே எம் பசி போக்கி
உம் பாசத்தாலே எமை வளர்த்து உம் பண்பாலே எமை வழி நடத்தி
உம் குணத்தால் எமை உயர்வித்து உம் சிரிப்பாலே எமை மகிழ்வித்து
உம் நேர்மையாலே வழி நடத்தி எமக்காகவே வாழ்ந்தீரே அம்மா
உமக்கென்று ஏதும் கொண்டதில்லையே உம் வாழ் நாளில்
ஏன் அம்மா பாரினிலே எமை தவிக்கவிட்டு நீர் சென்றீர்
உம் பிள்ளைகள் இங்கு தவிக்கின்றோம் உம் அன்பு முகம் காண வாரும்
அம்மா அம்மா எமை விட்டு நீர் சென்று ஆறு ஆண்டுகள் மறைந்ததோ
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உம் அன்பு என்றுமே எம்முடன்வாழும்.
"உம் ஆன்மா இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அழுகை | அமைதி |
|---|---|
| 09 | 06 |
| 10 | 06 |
| 1951 | 2019 |

### திரு.சிமியோன் சந்தான் பாலா

(ஓய்வுநிலை கிராம அலுவலர் – மாவிலங்கேணி, முருங்கன்)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் மறவோம்"

இந்த ஓராண்டு அனுபவத்தை,
உங்களுக்கு நான் விபரித்துச் சொல்ல
எனக்கொரு சந்தர்ப்பம்
கிடைக்குமாய் இருந்தால்...
இதுவம் கடந்து போகும்,
எதுவும் கடந்து போகும்,
அமைதியாய் இளைப்பாறுங்கள்
நன்றியோடு செபிக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி ஜெயா, உடன்பிறப்புகளோடும்
உறவினரோடும், உங்கள் நண்பர்களோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 05 1956 — உதிர்வு 07 04 2016




### திரு.செபஸ்ரியான் பீலிக்ஸ் ஜோர்ஜ் சந்தியோகா
(சின்னக்கடை, மன்னார்)

எம்மோடு ஒன்றாகி எம் மூச்சில் கலந்து இன்பமாய் இகமதில் நாமிருக்க பக்குவமாய் எம் தேவைகளை நிறைவுசெய்து குடும்பத்தை செம்மையாய் காத்தீர்களே - அப்பா
எல்லோரும் நல்லவராய் பண்புடனே இவ்வுலகில் நீங்கள் வாழ்ந்த வாழ்வும் புன்னகை பூத் உங்கள் வதனமும் எம் மனதில் என்றும் நிலைத்திடுமே.
இறைத்திட்டம் என்னவென்று இதுவரையும் புரியவில்லையே குறைகாணா உம் வாழ்வை குவலயத்தில் ஏன் மறைத்தார்?
ஆண்டுகள் நான்கு சென்றாலும் ஆறாது உம் பிரிவுத்துயர் ஆண்டவனை வேண்டுகின்றோம். உம் ஆன்மா அவர்பாதம் சாந்தியடைய

பிரிவால் துயருறும்: மனைவி, மகன், உறவினர், நண்பர்கள்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 03 1941 — மறைவு 20 05 2019



### திரு.செபமாலை நீக்கிலான் (றோமையா)
(பெரிய நீலாசேனை)

"இறைவா என்னை காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்" (தி.பா 16:1)

அன்பு ஐயா! நீங்கள் வளமாய் வாழ்ந்த நாட்களில் இரக்க மனதுடன் பிறருக்கு தாராளமாய் உதவுவது எப்படி என கற்று தந்தீர்கள் வறுமையில் வாழ்ந்த நாட்களில் மனஉறுதியுடன் உழைத்து வாழ கற்று தந்தீர்கள். நோயிலும் தனிமையிலும் வாழ்ந்த நாட்களில் பொறுமையையும் சகிப்பையும் கற்று தந்தீர்கள் உயிர் பிரியும் இறுதிவேளையிலும் அமைதியாய் இறைவனில் துயில் கொள்ளுவது எப்படி என கற்று தந்தீர்கள்.
ஐயா உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 12 1985 — உதிர்வு 19 04 2018



### திரு.பிரான்சிஸ் அருள்நேசன் பிகிறாடோ
(சிறிநாத்)
(பள்ளிமுனை)

உம் அன்புமுகம் மறைந்தாலும் அழியாது உன் நினைவுகள் ஆண்டுகள் இரண்டு ஆனாலும் எம் இதயம் ஆறாத்துயரில் கனக்கிறது. கண்முன் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் - உன் அன்பு முகம் எந்நாளும் எம்முள் உயிர் வாழும்.
அன்பு மகனாக, பாசமிகு சகோதரனாக உற்ற நண்பனாக அரவணைக்கும் உறவாக நீ வாழ்ந்த காலங்கள் சிறிதானாலும் உன் நினைவுகள் இறுதி மூச்சு உள்ளவரை எம்முள் உயிர் வாழும்.

உன் பிரிவினை நினைந்துருகும்
அன்புத்தாய், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள், மருமக்கள், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 03 1943 — உதிர்வு 09 03 2020



### திரு.பிச்சைகுட்டி செபஸ்ரியாம்பிள்ளை (யோசை)
(பனங்கட்டிக்கொட்டு, மன்னார்)
(பணியாளர் - கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்)

எங்கள் உணர்வுகளோடு கலந்து எங்கள் நினைவில் வாழுகின்ற எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் விழிமூடிய துயர் சுமந்து மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டாலும் எங்களோடு நீங்கள் இருப்பதாகவே நாங்கள் உணர்கிறோம். நீங்கள் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் உங்கள் முகம் எங்கள் முன் எந்நாளும் உயிர்வாழும் அமைதியில் நீங்கள் இளைப்பாற எங்கள் நன்றி நிறைந்த செபங்கள்.

பிரிவால் நினைந்துருகும்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 01 01 1944 — இறப்பு 09 04 2020



### திருமதி.ஜேம்ஸ் நீற்றம்மா
(ஜோசப்வாஸ்நகர், விடத்தல்தீவு)

மூபத்து ஒரு நாட்கள் முடிவாகிப் போனதம்மா முகம் காண முடியாது சேயர் நாம் தவிக்கின்றோம் இனத்தாரும் உறவுகளும் தேடி வந்து செல்கின்றனர் மனம் வெதும்பி வாடுகின்றோம் அம்மா... நீ... எங்கே? கேட்பவர்க்கு இல்லை என சொல்ல மனமில்லாதவளே! கேடு வரும் என்றாலும் இரங்கும் மனம் கொண்டவளே! வாடும் உறவுகட்கு வழங்கி மனம் மகிழ்பவளே! தேடுகின்றோம் இன்றும்மை அம்மா... நீ... எங்கே? துன்பம் எதுவும்எமக்கு தரக்கூடாது என்று - நீர்ப் பறந்து சென்றாயோ - அம்மா துயரம் எம் நெஞ்சை அடைக்குதம்மா - நாம் உமக்காய் தூய பரனிடம் வேண்டுகின்றோம்.
உம் ஆத்மா அமைதி பெற

பிரிவால் நினைந்துருகும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 06 1939 — விண்ணில் 02 05 2014



### திரு.பென்சமின் அமிர்தநாதன் (விமலதாஸ்)
(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்)

எத்தனை கவிதை எழுதினாலும் முடியவில்லை நிறுத்த எம் கனவில் கலந்த - உம் எல்லையற்ற நினைவுகள் நிற்கின்றன நிழலாக! அப்பாவை இழந்து ஆண்டுகள் ஆறு ஆனாலும் உந்தன் அன்பு முகமும் நேசப்புன்னகையும் மறையவில்லை! பூமியிலே ஒன்றாய் இருந்து கூடி மகிழ்ந்த காலமெல்லாம் மறைந்திடுமோ! நொடிப்பொழுதில் எமை வருந்த விட்டுச் சென்றுவிட்டீர்! வருடங்கள் நீளலாம் ஆனால் உம் நினைவுகள் என்றும் நீங்காது! ஆறு ஆண்டுகள் என்ன நாம் இந்த மண்ணில் வாழும் வரை நம் இதயத்தோட்டத்தில் ஓயாது பூத்துக்கொண்டிருக்கும் உம் நினைவுகள்!

நீர் விட்டுச்சென்ற உம் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1995.08.21 — உதிர்வு 2010.06.11

சிறுக்கண்டல், முருங்கன்.

### செல்வன்.நீ.கனிலன்

இழந்ததை மீண்டும் தரவேன் என்ற நம் தேவன்
எத்துணை உண்மையுள்ளவர்!
சாத்தான் உன்னைச் சோதித்த வேளை உனக்கு
உதவ யாரும் இல்லையே!!!
இப்பொழுது கடவுள் இழந்த உயிரை மீண்டும்
நமது குடும்பத்தில் தந்துள்ளார். சொல்லிலும்
செயலிலும் வல்லவருக்கு கோடான கோடி நன்றி
விண்ணகத்தில் முடிவில்லா சம்பாவனை கிடைத்து
எப்பொழுதும் நீ மகிழ்ந்திருக்கும் விசுவாசத்தில்
செபமே வாழ்வாகிவிட்ட உனது.

பிரிவால் நினைந்துருகும்
அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, றொமேல்சன், உறவுகள்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது"

தோற்றம் 1930.02.27 — மறைவு 2016.06.01

### திருமதி.லோறன்சியா டபரேரா
(ஆனந்தம்மா) (எமில்நகர்)

மண்ணுலகில் வாழ்ந்த வாழ்க்கை போதுமென்ற
இறைவனின் எண்ணத்தால் இறைவனடி சேர்ந்தீரம்மா!
நேர்மையின் வழியில் நீர் பெற்ற நல்வாழ்வை
எமக்கும் வாழ்ந்து காட்டினீரம்மா! உங்கள் ஆன்மா
விண்ணகத்தில் இன்பம் பெற செபிக்கின்றோம் அம்மா
கண்ணீருடன்!!!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 20

1திமொத்தேயு அதிகாரம் 1 - 2திமொத்தேயு அதிகாரம் 4வரை

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.08.2020ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்வி கற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி -20", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### விவிலிய வினாக்கள்

1. புனித பவுலடிகளார் மாசிதோனியாவுக்குச் சென்ற பொழுது யாரை எபேசில் இருக்குமாறு கூறியிருந்தார்?
2. நம் மீட்பராகிய கடவுள் எதனை விரும்புவதாக பவுலடிகளார் கூறுகின்றார்?
3. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள இணைப்பாளர் யார்?
4. திருத்தொண்டர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?
5. இறைப்பற்று யாருக்கு மிக ஆதாயம் தரும்?
6. உரிய காலத்தில் பேரின்பக்கடவுள் யாரைத் தோன்றச் செய்வார்?
7. கடவுள் நமக்கு எவ்வாறான உள்ளத்தைத் தந்துள்ளார்?
8. பெண்கள் எதன் வழியாக மீட்புப் பெறுவார்கள்?
9. இம்மையிலும் மறுமையிலும் நமக்கு வாழ்வளிப்பது என்ன?
10. நடை பிணங்கள் என்று புனித பவுலடிகள் யாரைக் கூறுகின்றார்?



## கிறிஸ்தவ திருமறையும் விஞ்ஞானக் கோட்பாடுகளும்

**மென்டிஸ் கூஞ்ஞ — முள்ளிக்குளம்.**

எங்களுடைய திருவிவிலியமானது எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய வாழ்க்கை வரைமுறைகளையும், உண்மை உள்ளடக்கங் களையும், விசுவாச உண்மைகளையும் உள்ளடக்கியதாகும். திருவிவிலியமானது சுமார் 6000 வருடகால சரித்திரக் குறிப்புக் களை உள்ளடக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இத் திருவிவிலியமானது எழுதப்பட கி.மு 1500 ஆண்டிலிருந்து கி.பி 98ஆம் ஆண்டுவரை சுமார் 1600 ஆண்டு காலப்பகுதி தேவைப் பட்டுள்ளது என கணிக்கப்பட்டுள்ளது.

2திமொத்தேயு 3:16இல் குறிப்பிடப்படுவது போல "மறை நூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்ப தற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது" என பவுலடியார் சிறந்த வரைவிலக்கணத்தைக் கூறுகின்றார்.

உலகில் நூல் (புத்தகம்) என்று பெயர் பெற்றதும் மற்றும் உலகின் முதலாவது நூலும் இதுவாகும். இந்த நூலானது கிட்டத்தட்ட 40 தலைமுறைகளின் வரலாற்றுக் குறிப்புக்களை உள்ளடக்கியுள்ளது. "இரும்புக் கருவிகளினாலும், ஈயத்தாலும் என்றென்றும் அவை பாறையில் பொறிக்கப்பட வேண்டும்" என்கின்ற யோபு 19:24இன் வாக்கியத்தின் படி 1457இல் கூடன் பார்க் மற்றும் றோஸ் மோல் என்பவர்கள் ஈய எழுத்தில் அச்சடித்தனர்.

திருவிவிலியத்தை எழுத ஆண்டவர் பல்வேறு தரப்பட்ட நபர் களைப் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். சீர்திருத்தவாதியான மோசேயின், மகாராஜா தாவீது, படைத்தளபதியான யோசுவா, பானப் பணிவிடைக்காரனாகிய நெகோமியா, பிரதம மந்திரி தானியேல், ஞானமுள்ள அரசன் சாலமோன், வைத்தியர் லூக்கா, வரி வசூலிப்பவரான மத்தேயு, செம்படவன் யோவான், மற்றும் யூத சங்கத் தலைவரான பவுல் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

திருவிவிலியமானது எக்காலத்திலும் பொருந்தக் கூடிய உண்மைகளைக் கொண்டுள்ளதாக புதை பொருள் வல்லுனரான மெல்வின் கைல்ஸ் கூறுகின்றார். ஒரு விடயத்தை விஞ்ஞான ரீதியாக நிருபிக்க அது 5 அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். 1. நேரம், 2. இடம், 3. விடயம், 4. இயக்கம், 5. சக்தி என்பனவாகும் மேற்குறிப்பிட்ட 5விடயங்களும் ஒன்றிப்போகும் தருணத்திலேயே அதை விஞ்ஞான ரீதியாக நிருபிக்க முடியும்.

திருவிவிலியத்தின் யோவான் நற்செய்தியின் 1ஆம் அதிகாரத்தின் 1,2ஆம் வசனங்கள் இயேசுவை இந்த ஐந்து பரிமானங்களுக்கும் நிறுவுவதைக் காணலாம். தொடக்கத்தில் வாக்கு இருந்தது என்பது காலத்தையும், அவ்வாக்கு கடவுளோடு இருந்தது என்பது இடத்தையும், அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது என்பது விடயத்தையும், "நீர்த்திரலின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது" என்ற தொடக்க நூலின் முதல் அதிகாரத்தின் 2வது வசனமானது. அவருடைய இயக்கத்தையும் " அனைத்தும் அவரால் உண்டாயின" எனும் யோவான் முதல் அதிகாரத்தின் இரண்டாவது வசனமானது விஞ்ஞானக் கோட்பாடுகளின் 5 நியமங்களையும் நிருபித்து நிற்கின்றது.

அரிஸ்டோட்டில், பிளட்டோ, தொலமி, அரிஸ்ரக்கஸ் ஆகியோர் பூமி தட்டையானது எனக் கூறி வந்தனர். ஆனால் திருவிவிலியம் ஆனது கி.மு840 ஆண்டுகளுக்கு முன் எசாயா 40:22இல் "உலகின் விதானத்தின் மீது வீற்றிருப்பவர் அவரே" என்கின்றது. பூமிக்கு 5 தூண்கள் உண்டு என்று எகிப்தியர்கள் நம்பினார்கள், அட்லஸ் சுமந்து கொண்டிருக்கிறான் என்று கிரேக்கர்கள் நம்பினார்கள், யானையும் பாம்பும் சுமந்து கொண்டிருக்கின்றது என்று இந்தியர்கள் கூறினார்கள். ஆனால் சேர் ஐசாக் நியூட்டன் பூமியின் ஈர்ப்பு சதியை கண்டுபிடித்த போது பூமி அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. என்ற கோட் பாட்டை முதன்முதலில் கூறினார். ஆனால் திருவிவிலியம் ஆனது கி.மு பலநூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட யோபு 26வது அதிகாரத்தின் 7வது வசனத்தில் "வெற்றிடத்தில் வடபுறத்தை அவர் பிரித்தார். காற்றின் இடையே உலகைத் தொங்கவிட்டார்" என்கிறனூடாக விஞ்ஞானத்தின் கோட்பாட்டை எப்போதோ எடுத்துரைத்து உள்ளதைக் காணலாம்.

1930இல் பால் வெளியில் 100 மில்லியன் நட்சத்திரங்கள் உண்டு என்று விஞ்ஞானிகள் கூறினர், 2000 ஆண்டளவில் அதன் எண்ணிக்கை 40 மில்லியன் என்கிறார்கள் ஆனால் தற்போது விஞ்ஞானிகள் அவற்றை எண்ண முடியாது என்கிறார்கள் இதையே திருவிவிலியத்தின் எரேமியா 33:22 "எண்ணமுடியாத விண்மீன்களையும் அளக்க முடியாத கடல் மணலையும் போல" என்கிறார்.

யோபு 28: 25ஆம் வசனத்தில் " காற்றுக்கு எடையைக் கடவுள் கணித்த போது" அதாவது அவ்வாக்கியம் காற்றுக்கு எடை உண்டு என்று எப்போதே கூறிவிட்டது. ஆனால் அதை நிருபிக்க விஞ்ஞானம் ஒரு பலூணைக் கண்டுபிடிக்கும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

யோபு 36:27இல் "நீர்த்துளிகளை அவர் ஆவியாக இழுக்கிறார்.அவற்றை மழையாக வடித்துக் கொடுக்கிறார்". இதைத் தானே விஞ்ஞானமும் விபரிக்கின்றது. விஞ்ஞானம் தற்போது ஒரு உயிரியின் உயிர் அதன் குருதியிலேயே உள்ளது என்கிறது. இதையே லேவியர் 17:11ஆம் வசனத்தில் "உடலின் உயிர் குருதியில் உள்ளது" என்பதனை எப்போதோ ஆணித்தரமாக கூறி உள்ளதைக் காணலாம்.

1கொரிந்தியர் 15:41இல் ஒவ்வொரு விண்மீன்களின் சுடரும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது என்று பவுலடியார் குறிப்பிடுகின்றார். இதை விஞ்ஞானமும் நிருபித்துள்ளதைக் காணலாம். யோபு 38:16ஆம் வசனத்தில் "கடலின் ஊற்று வரை நீ போனதுண்டா" எனக்குறிப்பிடுகின்றது. தற்போது விஞ்ஞானமும் கடலுக்குள் ஊற்றுக்கள் உண்டு என்பதை நிருபிக்கின்றது.

தற்போது எல்லா அறுவைச் சிகிச்சைக்கும் முன்னோடியாக விளங்குவது ஜேம்ஸ் ஜாங் சாம்சன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட குளோறபோம் ஆகும். அவரிடம் இச் சிந்தனை உங்களுக்கு எப்படித் தோன்றியது என்று கேட்டபோது அவர் கூறியது தொடக்க நூலின் 2:21வது வசனத்தின் "ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கத்தை வரச்செய்து" என்பதை கோடிட்டுக் காட்டியதை மறந்துவிட முடியாது. எனவே திருவிவிலியத்தி னூடாக வரலாற்றுச்சான்றுகள் தற்போது அகழ்வு ஆராய்சிகளின் ஊடாகவும் நிருபிக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

திருப்பாடல்கள் 12:6 வசனத்தின் கீழ்வரும் வார்த்தைகளின் படி "ஆண்டவரின் வாக்குறுதிகள் கலப்பற்ற வாக்குறுதிகள், மண் உலையில் தூய்மையாக்கப்பட்ட வெள்ளி போன்றவை, ஏழு முறை புடமிடப்பட்டவை" திருவிவிலியம் தன்னுடைய உண்மைத் தன்மையை என்றும் நிருபித்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 18 இல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
கி. சலோஜனா,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
மேரி விதுஷா,
பறப்பாங்கண்டல் பங்கு.

**மூன்றாம் பரிசு:**
அபினா
கற்கிடந்தகுளம் பங்கு,
மளுவராயர் கட்டையடம்பன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 55 பேர்.

1. த.இவானோதருணி, கற்கிடந்தகுளம்பங்கு.
2. செ.மரிஸ்ரெலா, அடம்பன் பங்கு.
3. A.டன்சிகா லெம்பட், வங்காலைபங்கு.
4. P.அபிஷோன், பண்டாரவளைபங்கு.
5. K.ஜெனோஸ்ரன், தாழ்வுபாடுபங்கு.
6. K.லூட்ஸ் வேழினி, தாழ்வுபாடுபங்கு.
7. P.விதுர்ஷிகா, பண்டாரவளைபங்கு.
8. T.சந்தோஷ், ஜோசப்வாஸ்நகர்பங்கு.
9. R.ஜக்சனா, ஜோசப்வாஸ்நகர்பங்கு.
10. R.அக்ஷயன், சாந்திபுரம் பங்கு.
11. S.தன்வந்திரி, இலுப்பைக்குளம் பங்கு.
12. சந்திரக்குமார் ஷைலி, தலைமன்னார் பங்கு.
13. செ.மரியறூபன், அடம்பன் பங்கு.
14. P.S.மேரி ஜெஸ்மின் றோச், பள்ளிமுனைப் பங்கு
15. கோ.அனன்ஷிகா, சின்னக்கடை மன்னார்.
16. கோ.அல்றிக், சின்னக்கடை மன்னார்.
17. R.தரணியா, பண்டாரவளை.
18. பீ.கெவின் பிகிறாடோ, தேவன்பிட்டிபங்கு
19. P.நிறோசிக்கா பீரிஸ், பறப்பாங்கண்டல்பங்கு
20. A.ஜெகநாதன் வதனா, அளவக்கைபங்கு
21. வி.மேரி சுஜோ, உயிலங்குளம்பங்கு
22. வி.அன்ரனி ஜொய்சன், உயிலங்குளம்பங்கு
23. R.சர்மிலா, யோசவாஸ்நகர்பங்கு
24. ச.சாள்ஸ் துஸ்ஜாலின், அளவக்கைபங்கு
25. அ.ஆன் சோபிக்கா, வங்சியன்குளம்பங்கு.
26. ந.ஆன் மேரிறினுசா, வஞ்சியன்குளம்பங்கு.
27. A.தீபிகா றக்ஷாயினி, வஞ்சியன்குளம்பங்கு.
28. வி.றாஜினி, கோமரசன்குளம்பங்கு.
29. T.ஆன் நிதுசா, பெரியபண்டி விரிச்சான்பங்கு.
30. பு.ஜேம்ஸ் லோஷன், தேவன்பிட்டிபங்கு.
31. அ.கபில்ராஜ், அடம்பன்பங்கு.
32. P.யூஜின்லோக்சன், தேவன்பிட்டிபங்கு.
33. N.சிபியன் பறுனாந்து, பேசாலைபங்கு.
34. N.கெயில் பறுனாந்து, பேசாலைபங்கு.
35. M.S.கிறிஷ் கெவோன்சன், பேசாலைபங்கு.
36. S.நிறோஜன், தரணிக்குளம்பங்கு.
37. M.S.றொஷிகா குரூஸ், பேசாலைபங்கு.
38. பி.லோறன்ஸ், தரணிக்குளம், யோசவாஸ்பங்கு
39. பி.மிரஷாயினி, தரணிக்குளம்பங்கு
40. வ.மேருஷ்சன், தரணிக்குளம்பங்கு
41. அ.டொனிவிக்டறி, தரணிக்குளம்பங்கு
42. ஞா.ஜனனி, தரணிக்குளம்பங்கு
43. அ.ஜெனிற்றா, தரணிக்குளம்பங்கு
44. ஜெ.டனிஸ்ரா, தரணிக்குளம்பங்கு
45. க.டனிஸ்ரன், தரணிக்குளம்பங்கு
46. க.லின்சிகா, தரணிக்குளம்பங்கு
47. கா.றொசான் கிறிஸ்ரி, தரணிக்குளம்பங்கு.
48. தே.தேவராசா, தரணிக்குளம்பங்கு
49. S.கஜா, தேவன்பிட்டிபங்கு
50. அ.ஆன் அதிஸ்ரா குரூஸ், பெரியபண்டிவிரிச்சான்பங்கு.

3ம் பக்கத் தொடர்ச்சி

### திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்...

திருப்பலியின் பின்னர் முதலாவது பயிற்சி கருத்தமர்வில் பங்குபற்றிய ஊக்குவிப்பாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆயர்தந்தை அவர்களினால் ஆசியுரை வழங்கப்பட்டது. அருட்பணி. றஜீவன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். பின் அருட்பணி. ச.சவுல்நாதன் அடிகளாரால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. பினனர் ஆயர்தந்தை அவர்களினால் அருட்பணி. றஜீவன் அடிகளாருக்கும் அவரது குழுவினருக்கும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டது.

அத்துடன் ஊக்குவிப்பாளர்களுக்கான சான்றிதழ் களையும் வழங்கி கௌரவித்தார். பின் ஆயர்தந்தையுடன் இணைந்து அனைவரும் குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வுகளை எல்லாம் மன்னார் மறை மாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் இயக்குனர் அருட்பணி. ச.சவுல்நாதன் அடிகளார் மிகச் சிறப்பாக ஒழுங்கு படுத்தியிருந்தார். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் கட்டுரைகள் - அருட்திரு. பி.ஏ.தோமஸ் அமதி அடிகளாரின் வாழ்வும் பணியும் -

# தோமஸ் அடிகளார் தோலகட்டி சந்நியாசி

செபமாலைக் கன்னியர் மடம், பட்டித்தோட்டம், மன்னார்.
தொடர் - 06

**குருத்துவ திருநிலைப்படுத்தல்**

1912ஆம் ஆண்டு தைத்திங்கள் 6ஆம் நாள் இரவு குருத்துவ திருநிலைக்கான தினமாக தீர்மானிக்கப்பட்டது. திருவழிபாட்டு நாட்காட்டியின்படி அந்நாள் திருக்காட்சிப் பெருவிழாவாகவும் இருந்தது. தேவாலய மணிகள் ஒலி எழுப்பி குறிப்பிட்ட விழாவை பொது மக்களுக்கு அறிவித்தன. குருத்துவ அபிஷேக நிகழ்வைக் கண்டுகளிக்க ஏராளமான பொது நிலையினர் மிகவும் ஆவலுடன் தேவாலயத்திற்கு படையெடுத்தனர். குருப்பட்டம் பெற மூன்று பேர் ஆயத்தமாய் இருந்தனர். அவர்கள் சகோதரர் நீக்கிலாஸ், சகோதரர் இம்மானுவேல், அவர்களுடன் சகோதரர் தோமஸ். யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய ஹென்றி யூலைன் அ.ம.தி ஆண்டகையால் குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. சகோதரர் தோமஸ் முதல் நாள் மாலையிலிருந்தே "என் ஆன்மா இறைவனை மகிமைப்படுத்துகின்றது."என்ற மரியாளின் மகிழ்ச்சிக் கீதத்தைப் பாடிக் கொண்டிருந்தார். அருட்திரு. தோமஸ் அடிகளாரின் புனித வாழ்வு சிலுவையில் அறையுண்ட இயேசுவின் வாழ்வுபோல் மாற்றம் அடைந்தது. குருப்பட்ட வாழ்வில் அவர் தன்னை பலியாக்கிய அந்த அர்ப்பண செபத்தை தன் ஆண், பெண் துறவிகளான பிள்ளைகளுக்குப் பின்னைய நாட்களில் கற்றுத்தந்தார். "ஓ என் இறைவா, பரிசுத்த தம திரித்துவமே நான் உம்மை அன்பு செய்யவும் பிறர் உம்மை அன்பு செய்யவும் வேண்டுமென ஆசிக்கின்றேன். என் வாழ்வை முழுமையான அன்பின் தகனப்பலியாக ஒப்புக் கொடுக்கிறேன். நான் உமது அன்பு ஒன்றுக்காகவே பணிபுரிவேன். உமது திவ்விய இதயத்திற்கு ஆறுதல் அளிப்பதும், உம்மை என்றும் அன்பு செய்ய ஆன்மாக்களை மீட்பதும் என் ஒரே நோக்கமாகும். அந்த நாளிலிருந்து அருட்திரு. தோமஸ் அடிகளார் திருப்பலி ஒப்புக் கொடுப்பது ஒரு தனிச் சலுகையாகும். உன்னத அருளாகவும் இரக்கமுள்ள இறைவன் தாமே தந்தார் எனக் கருதினார். அவரது ஆன்மா விபரிக்க முடியாத விண்ணக மகிழ்ச்சியாலும், நன்றியாலும் நிரம்பி வழிந்தது. ஒவ்வொரு முறையும் அவர் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது மரியன்னை தன் அருகிலிருப்பது போல் அவரது பிரசன்னத்தை உணர்ந்தார். புதிதாக குரப்பட்டம் பெற்ற ஒவ்வொரு குருவும் ஆயரிடமிருந்து கீழ்ப்படிதல் கடிதத்தை ஆவலுடன் எதிர் பார்ப்பது சாதாரண வழக்கமாகும். அருட்திரு. தோமஸ் அடிகளாரின் கீழ்ப்படிதல் கடிதம் மூலம் எந்தப் பங்குப் பணியும் கொடுக்கப்பட வில்லை. ஆயர் இவரிடம் "தந்தையே உங்களைப் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அனுப்புகிறேன். அங்கு நல்ல ஓய்வெடுங்கள், அருட்தந்தை சாள்ஸ் மத்தியூ உங்களைக் கவனிப்பார்" என்று கூறினார். தோமஸ் அடிகளார் மருத்துவரின் அபிப்பிராயப்படி மிகவும் குறைந்த காலமே உயிர் வாழ்வார் என அவர்கள் அனைவரும் நம்பினர். அவரும் இறை திட்டமென மிகவும் அமைதியாக இதனை ஏற்றுக் கொண்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் தங்கினார். கீழ்ப்படிதல் வழி பெரும் ஆன்மீக நன்மைகள் அருளப்படுகின்றன என அவர் முழுமையாக உணர்ந்திருந்தார். அருட்திரு. தோமஸ் அடிகளாருக்கு இது உண்மையிலேயே இறைவனின் தெய்வீகத் திட்டமாக அமைந்தது.

**ஒளிரும் மெழுகுவர்த்தி**

அருட்திரு தோமஸ் அடிகளார் கல்லூரியில் ஒரு ஒளிரும் மெழுகுவர்தி போல் மிளிர்ந்தார். அவர் ஆன்மீக ரீதியில் தியான யோகியாகவும், இதயத்தளவில் இறையரசிக்காக மிகுந்த ஆன்ம தாகமுடையவராகவும் இருந்தார். இலங்கைத் திருச்சபைக்கு ஏதாவதொரு பெருங்காரியம் ஆற்ற வேண்டுமென பேராவல் கொண்டிருந்தார். சமயம் சார்ந்த விடயங்களை கூடுதலான அளவு வாசிக்கவும், ஆய்வு செய்யவும், அவற்றை பிரதி பலிக்கவும் மனத்தளவில் பேராவல் கொண்டிருந்த இவருக்கு நூல் நிலையத்தில் செலவழிப்பதற்குரிய அபரிதமான நேரத்தை ஆண்டவர் தாமே அருளினார். "ஆண்டவர் என் ஆயர், எனக்கேதும் குறையில்லை. பசும்புல் மேய்ச்சல் நிலத்தின் மீது என்னை அவர் இளைப்பாறச் செய்கின்றார். அமைதியான நீர் நிலைகளுக்கு என்னை அழைத்துச் செல்கின்றார். அவர் எனக்குப் புத்துயிர் அளிக்கின்றார்."[தி.பா 23:1-3] அருட்தந்தை தோமஸ் அடிகளார் தமக்கு வியாதியின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட ஊட்டச்சத்து மிக்க உணவுகளிலோ, சுவையான பானங்களிலோ மகிழ்ச்சி காணவில்லை. ஆனால் துறவிகளின் வாழ்வு பற்றிய வரலாறுகளைக் கற்பதில் முழுமையாக ஈடுபட்டார். தன்னுடைய சபையான அமல மரித்தியாகிகள் சபை வரலாற்றைக் கற்றக் கொண்ட அதே நேரம் காத்தூசியன், றப்பிஸ்ற், ஆசிர்வாதப்பர் சபை போன்றவற்றின் வரலாறுகளையும் கற்றறிந்தார். இதன் வழி அவர் பல உண்மைகளை ஆய்ந்தறிந்து தன் அறிவை ஆழமாக்கிக் கொண்டார்.

தொடரும்...

# 200வது யூபிலி ஆண்டு நிறைவு

## போர்டோவின் திருக்குடும்ப சபை - வரலாற்றுப் பார்வை

அருட்சகோதரி. லுமினா போல்ராஜா
திருக்குடும்ப கன்னியர் சபை
தொடர் - 07

இயேசு, மரி, சூசை நசரேத்தில் வாழ்ந்த வாழ்வை அதாவது இயேசு,மரி,சூசை என்பவர்கள் இவ்வுலக வாழ்வில் இறைவனை மாத்திரமன்றி வேறு ஒன்றையும் நேசிக்கவுமில்லை, தேடவுமில்லை, ஆசிக்கவும் இல்லை. அவர்களுடைய எண்ணங்கள், உணர்வுகள், விருப்பங்கள், செயல்கள், உறவுகள் யாவற்றிவும் மையப்பொருளாக விளங்கியவர் இறைவனே" என்பதையும் மூவொரு கடவுளின் சாந்த வடிவமான இக்குடும்பம் இறைதந்தையின் சித்தத்தோடு தம்மைப் பூரணமாக ஒன்றித்து கீழ்ப்படிவு, பற்றற்றதன்மை, எளிமை, விசுவாசம் நிறைந்த வாழ்வு வாழ்ந்ததையும் மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை தம்வாழ்வின் மாதிரிகைகளால் திருக்குடும்பத்தின் வாழ்வை வாழ வழிகாட்டினார். இவ்விதமாக மறைக்கல்வி வகுப்புக் களில் பங்குபற்றியவர்கள் "திருக்குடும்பத்தின் மக்கள்" என அழைக்கப்பட்டனர்.

காலம் உருண்டோடியது. இறைவன் தமக்குரிய காலத்தில் தம் மறைவான திட்டத்தைப் பியன்வெனு ஊடாகச் செயவ்படுத்தச் சித்தம் கெண்டார். 19ம் நூற்றாண்டில் பிரான்ஸ்நாடு பல்வேறு குழப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டிருந்தது. அரசியற் புரட்சியினால் மக்கள் பலதரப்பட்ட துன்பங்களுக்கு ஆளாகி வேதனையுற்றனர். குழந்தைகள் அனாதைகள் ஆக்கப்பட்டனர். குடும்பங்கள் பிளவுபட்டன. மக்கள் சிதறுண்டனர். விசுவாசம் தளர்வுறும் இக்கட்டான சூழமைவு. இக்காலக் கட்டத்தில்தான் இறைவன் தன் மறைவான திட்டத்தை பியன்வெனுவுக்கு வெளிப்படுத்தினார்.

1820ம் ஆண்டு தைத்திங்கள் 08ம் நாள் ஒப்புரவு அருட்சாதனம் பெற வந்த பெண்ணொருவர் தாம் ஒரு துறவியாக வர விரும்புவதாகத் தந்தை பியன்வெனுவிடம் தெரிவித்தார். இன்னும் சிலநாட்களின் பின் வேறு இரு பெண்கள் இதேவித ஆவலைத் தந்தைக்கு வெளிப்படுத்தினர். இவ்வெளிப்பாடு பியன்வெனுவின் உள்ளத்தில் முளைவிட்ட திட்டத்தை இறைவன் உறுதிப்படுத்தும் வெளிப்பாடாக அமைந்தது. பியன்வெனு தனக்குக் கிடைத்த அனைத்து வெளிப்பாடுகளையும் அன்னைமரியிடம் ஒப்படைத்து, செபித்து வந்தார். இவைபற்றித் தனது ஆன்மீகவழிகாட்டியுடன் கலந்துரையாடி, அவரின் தூண்டுதலாலும், உற்சாகமூட்டும் வார்த்தைகளாலும் ஒரு சிறுகுழுவை ஒன்றாக இணைப்பதற்கு முன் அதன் வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டி ஒழுங்குகளையும் எழுதினார்.

1820 ஆண்டு வைகாசித் திங்கள் 28ம் நாள் திரித்துவ ஞாயிறன்று மூன்று இளம்பெண்களுடன் "திருக்குடும்பம்" என்னும் புதிய குழு லொறெற்றோ சகோதரிகள் என்ற பெயரில் முளைவிடத் தொடங்கியது. தந்தை பியன்வெனு தம் ஆசைகள், திட்டங்கள், வெளிப்பாடுகள் அனைத்தையும் பேராயிடம் எடுத்துக்கூறி அவரது ஆசீரையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெற்றுக்கொண்டார். சபையின் ஆரம்பம் இறைவெளிப்பாட்டின் அனுபவமாகவே தந்தை பியன்வெனுவுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது.

**இறைதிட்டமே பியன்வெனு தந்தையின் திட்டம்...**

"தமது திருவுளத்தின் மறைபொருளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். இது கிறிஸ்து வழியாக கடவுள் விரும்பிச் செய்த தீர்மானம். கூால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்றுசேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்" (எபே 1:9-10) இறைதந்தையின் இத்திட்டத்தை நிறைவேற்ற ஆர்வமும், ஆவலும் கொண்ட பியன்வெனு கனவு கண்டார். அது எப்படியென்றால் "பாரிய ஒரு விருட்சம். அதில் பல இன வண்ணப்பறவைகள் வந்து ஒன்று கூடுகின்றன. வித்தியாசமான வேறுபாடுகளைக் கொண்டவைகள் ஒரே குரலாக "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்று பாடுகின்றன. இதேபோல் தம் சபையில் இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகள் கடந்து பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், இளையோர், துறவறத்தார், குருக்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து இறைதந்தையை மகிமைப்படுத்தவும், இயேசுவின் மீட்புப் பணியில் பங்குகொண்டு அவருக்குச் சாட்சியம் பகிரவும் கனவு கண்டார். அவரின் கனவும், இறைத்தந்தையின் மறை பொருளான திட்டமும் இன்றைய பிரபஞ்சம் பற்றிய புதிய பார்வையில், புதிய கண்ணோட்டத்தில் "பாரிய குடும்பம்" என்ற விழிப்புணர்வில் நனவாகி வருகின்றது.

**பொருளாதாரமா? அருளாதாரமா?**

"கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும், எப்போதும் தேவையானதெல்லம் உங்களுக்குத் தருவார், அனைத்து நற்செயல்கள்ளயும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்.." (2கொரி 9:8) தந்தை பியன்வெனு மூன்று இளம்பெண்களுடன் குழுவை ஆரம்பித்தபோது மூன்று பிராங் மட்டுமே அவரிடம் இருந்தது. "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத்:6:33) என்னும் இறை இயேசுவின் வாக்கு மாறாத வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு வருங்காலத்தைப் பற்றிய அங்கலாய்ப்பின்றி அன்றன்றைய இறைவனின் வெளிப்பாடுகளுக்குத் தன்னைக் கையளிப்பதன் மூலம் இறைபராமரிப்பில் முழுமையாகத் தன்னை சரணடைவித்தார். இறையருளுக்கு மட்டும் தம்மைத் திறந்து வைத்தார். திருக்குடும்பத்திடம் விளங்கிய ஏழ்மை, வெறுமை, காத்திருத்தல், பகிர்தல், தாழ்மை, உழைப்பு, ஒருவர் ஒருவரைத் தாங்குதல், ஒருவர் ஒருவரில் தங்கியிருத்தல், ஒருவர் ஒருவரை நிறைவுபடுத்தல், இறைவனை மாத்திரம் அனைத்திலும் காணுதல் போன்ற அருட்செயல் நிறைந்த பண்புகளை சபையின் அழியாத செல்வங்களாக சகோதரிகளின் உள்ளத்தில் அடித்தள மாகப் போட்டார். இவர் மட்டில் மக்களும், உடன் பணியாளர்களும், திருஅவையின் தலைவர்களும் பல விதமான கேள்விகளை, நம்பிக்கையீனங்களை வெளிப் படுத்திய போதும் மனம் கலங்காது "பொருளாதாரத்தைவிட அருளாதாரத்தை" நம்பித் துணிந்து மனஉறுதியுடன் முன்னேறிச் சென்றார்.

தந்தை பியன்வெனு தன்னிடம் வருபவர் எவரையும் வெறுங்கையுடன் அனுப்புவதில்லை. அனைவரையும் முக மலர்ச்சியுடன் வரவேற்று அவர்கள் தேவைகள் அனைத்திலும் தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து எந்த வேளையிலும் இறைதந்தையில் தங்கி வாழ்ந்தார்.

**புதுவாழ்வு நோக்கிப் பயணம்**

புதுவாழ்வு வாழப் புறப்பட்ட பெண்களைத் தந்தை பியன்வெனு தகுந்தமுறையில் தயார்செய்தார். அடித்தளம் இறைவனில் உறுதியாகக் கட்டப்பட ஒரு வாரத்தைத் தியான நாட்களாக, இறையனுபவத்தைப் பெறும் நாட்களாகச் செலவிடச் செய்தார். இதற்குத் தந்தை பியன்வெனுவே மறைபோதகராகவும் இருந்து இறை வெளிப்பாடுகளை அவர்கள் உய்த்துணரச் செய்தார். அவர்களும் தந்தையின் வழிகாட்டலுடன் அவரது இலட்சியப் பாதையில் தொடர்ந்து செல்ல தம்மைக் கையளித்தனர்.

நாகரீக, முன்னேற்ற வளர்ச்சியும்,அறிவும், அழகும், பொலிவும்கொண்டு செல்வச் சிறப்பில் மேலோங்கி நின்ற பிரானஸ் அரசியற் புரட்சியால் பொலிவிழந்து, சோபை இழந்து காணப்பட்டது. மக்கள் பல வழிகளில் துன்பம் என்ற கடலில் மூழ்கி எழுந்தனர். பெண்கள் விதவைகளாக்கப் பட்டனர். குழந்தைகள் அனைதைகளாக்கப்பட்டனர். குடும்பங்கள் பிளவுபட்டு சீர்குலைக்கப்பட்டிருந்தது. இளம்பெண்கள் வாழ்வினை இழந்து உலகப்போக்கால் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்தனர்.

சமயப்பற்றுப் குறைந்து விசுவாசம் ஆட்டம் காணும் ஆபத்தானநிலை. மக்கள் எல்லா சூழ்நிலைகளாலும் தாக்கப்பட்டு நிர்கதியாக வாழ்ந்த காலக்கட்டத்தில் தான் பியன்வெனு விழித்தெழுந்தார். துன்புறும் மனிதனுக்கு வாழ்வு கொடுக்க, பிளவுபட்ட குடும்பங்களை ஒன்றாக்கி, விசுவாசத்திலும், அன்பிலும், ஐக்கியத்திலும் நிலைநிறுத்த வேண்டிய காத்திரத் தேவையை சேவையாக்க வீறுகொண்டு எழுந்தார். "புரட்சியில் பூத்த புதுமலராய்" ஒன்றிணைந்த பயணத்தைத் தொடர்ந்தார். திருக்குடும்ப சபையை உருவாக்கினார்.

**சபையின் நோக்கும் இலக்கும்**

- எல்லா சூழ்நிலைகளிலும் அன்பையும், விசுவாசத்தையும் பரப்பி உறுதிப்படுத்தி இறை குடும்பங்களாக வாழ வழிகாட்டல்.
- காலத்தின் தேவைக்கேற்ப, காலத்தின் குறி அறிந்து திருஆட்சிப் பீடத்துக்கு உதவுதல்.
- ஆதிக்கிறிஸ்தவ வாழ்வைப் புதுப்பித்தல்

**சபையின் ஊற்றும் உறைவிடமும்**

திரித்துவம், திருக்குடும்பம், ஆதிக்கிறிஸ்தவ சமூகம் தங்களுள் ஒன்றிணைந்த வாழ்வை அன்பினால் கட்டி எழுப்பி ஒரே குடும்பமாக ஒரே உள்ளமும், ஒரே நோக்கும் கொண்டவர்களாக வாழ்ந்தனர். இத்தகைய வாழ்வையே சபையின் ஊற்றும், உறைவிடமுமாக தந்தை பியன்வெனு கொண்டிருந்தார்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு நோயும் அதற்கான முதலுதவியும்

**ச.தேவசகாயம், நியூயோர்க் USA.**

உலக வரலாற்றில் கைத்தொழில் புரட்சி தொடக்கம் தகவல் தொழில்நுட்ப புரட்சியாகிய தற்காலம் வரை நாம் வாழும் உலகம் விரைவாக மாறிவருகின்றது. இம்மாற்றங்களினால் மனிதர்கள் பல்வேறு நன்மைகளை அடைந்த போதிலும் பல தீமையான விளைவுகளையும், நோய்களையும் சந்தித்து வருகின்றார்கள். இவற்றுள் மாரடைப்பு சாதாரணமாகி விட்டது. பெரும்பாலும் இந்நோயானது அதிகளவான கொழுப்பு உணவுகளை உண்ணுதல், அதிகளவில் உடல் பருத்தல், போதிய உடற்பயிற்சியின்மை, புகைபிடித்தல், மனஅழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் பரம்பரை போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது. இதயத்தசைகளுக்கு இரத்தம் கிடைப்பது குறைந்து விடும் நிலையை 'மாரடைப்பு' என்கின்றோம். அதன் தன்மையைப் பொறுத்து மாரடைப்பை பல வகையாகப் பிரிக்கலாம். இருப்பினும் இக்கட்டுரை மாரடைப்பு, அதன் தன்மை, அறிகுறிகள், முதலுதவி பற்றியதாக அமைகின்றது.

இதயத்திற்கு குருதியினைக் கொண்டு செல்லும் முடியுரு நாடியில் படிந்துள்ள கொழுப்புக் காரணமாக அதனூடாகச் செல்லும் குருதி கட்டியாகின்றது. இதன் காரணத்தால் குருதி விநியோகம் இதயத் தசைகளுக்குத் தடைப்படுவதனால் ஏற்படும் நிலையை மாரடைப்பு என்கின்றோம். அதாவது குருதிக்கட்டி காரணமாக முடியுரு நாடி வழியாக இதயத் தசைகளுக்கு போதியளவு குருதி விநியோகம் கிடைக்காமை அல்லது முற்றாகத் தடைப்படுவதனால் தாங்க முடியாத வலி மார்புப் பட்டையின் பின்னால் ஆரம்பித்து மேல் அவயங்களுக்கும் தொண்டை, தாடைகளுக்கும் பரவும். மாரடைப்பு ஏற்பட்ட ஒருவரில் நோயின் தன்மையின் அளவைப் பொறுத்து அதன் அறிகுறி காணப்படும். நோயாளியின் ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியாக நிலைமை மோசமடையும் வரையிலான நோய் அறிகுறிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**நோய் அறிகுறிகள்:**

- நோயாளி மார்பை அமுக்கிப் பிடித்தவாறு காணப்படுவார்.
- மார்பின் மத்தியில் ஏற்படும் கடுமையான வலியானது இடது கை, கழுத்து, தாடை என்பவற்றுக்குப் பரவிக் காணப்படும்.
- ஓய்வுநிலையிலிருக்கும் போதும் இந்தவலி தொடர்ந்தும் இருக்கும்.
- அடிவயிற்றில் வலி அல்லது அஜீரணம் போன்ற நிலை காணப்படும்.
- அமைதியற்ற நிலையில் காணப்படுவார்.
- தோலும், உதடுகளும் நீல நிறமாக மாறும், உடல் குளிரும் நிலையை நோயாளி உணருவார். அத்துடன் உடல் வியர்க்கும்.
- மயக்கம் அல்லது தலை சுற்று ஏற்படும்.
- அளவுக்கு மிஞ்சிய பயத்துடன் இருப்பார்.

சிலவேளை சுவாசம், இதயத்தொழிற்பாடு தடைப்பட்டு மரணம் சம்பவிக்கலாம். இவ்வாறான நோய் அறிகுறிகளைக் காணும் சந்தர்ப்பத்தில் முதலில் நோயாளியிடம் காணப்படும் மரண பயத்தினைப்போக்கும் வகையில் ஆறுதல் வார்த்தை கூறி அவரை ஆசுவாசப்படுத்தி பின்வரும் முதலுதவி முறைகளைப் பின்பற்றி விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

**முதலுதவி வழங்கல்:**

1) ஆரம்பத்தில் நோயாளியால் முதலுதவி செய்பவருக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடிய சந்தர்ப்பம் ஏதும் உண்டா என அறிதல் அவசியமாகும். உதாரணமாக நோயாளி மின்னிணைப்போடு இருப்பின் முதலுதவி வழங்கச் செல்லும் முதலுதவியாளரும் பாதிப்புக்குள்ளாவார்.

2) பின்னர் நோயாளி சுய நினைவோடு இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவரது பிரதிபலிப்பை அறிதல் வேண்டும். இதனை நோயாளியின் சுவாசத்தினை பார்த்தல், கேட்டல், உணர்தல்முறை மூலம் அறியலாம். தொடர்ந்து நோயாளியின் சுவாசப்பாதை திறந்து, அவரது சுவாசத்தினைப் பரிசோதித்தல் வேண்டும். அத்துடன் அவரது கழுத்தில் அல்லது கையில் அவரது நாடித்துடிப்பினையும் அறிதல் வேண்டும். இதனை முதலுதவியில் DRABC என்று அழைப்பர்.

3) சுயநினைவுடன் இருப்பாராயின் அவரது தலை, தோள் என்பவற்றை ஆதாரப்படுத்தி அவரது முழங்காலை மடித்து அதன் கீழ் தலையணை அல்லது அது போன்ற தடிப்பான துணியை மடித்து வைத்து அவரை சௌகரியமாக உட்கார வைக்கவும். இதன்மூலம் கால்பகுதிக்குச் செல்லும் குருதியின் அளவு குறைந்து இதயத் தொழிற்பாட்டுக்கு சற்று ஓய்வு கொடுக்கமுடியும். அருகிலிருப்பவர்களின் உதவியைப் பெற்று வாகனத்திற்கான ஏற்பாட்டினைச் செய்யவும்.

4) சிலவேளை நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்படும். இதனால் உடல் வெப்பம் குறைந்து குளிரும்நிலை காணப்பட்டால் தடிப்பான துணியினால் அவரது உடலை கழுத்திலிருந்து பாதம்வரை மூடவும்.

5) நோயாளி சுய நினைவுடன் இருப்பாராயின் ஒரு அஸ்பிறின் (Asprin) குளிசையினை மெதுவாக உமிழ்ந்து சாப்பிடக் கொடுக்கவும். (குளிசையினைக் கொடுக்க முதல் ஒவ்வாமை இருக்கிறதா என உறுதி செய்யவும்) இதன்மூலம் இதயத்தில் பாதிப்புற்ற பகுதிக்கான பாதுகாப்பு வழங்கப்படும்.

6) நோயாளியின் சுவாசமும், நாடித்துடிப்பும் எந்தவேளையும் செயற்படாது போகலாம். இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக விரைந்து உயிர்ச்சுவாசமும், வெளிமார்பு அமுக்கமும், மீள உயிர்ப்பித்தல் செய்முறையினைச் செய்வதற்கு எந்த வேளையிலும் தயாராக இருக்கவும். (இதனை வைத்தியர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் முறையாகப் முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களாலேயே செய்ய முடியும்) என்பது முக்கிய அம்சமாகும்.

**மாரடைப்பு நோயும் அதற்கான முதலுதவியும்.**

7) நோயாளி சுயநினைவு இழந்த நிலையில் சுவாசித்துக் கொண்டு இருப்பாராயின் அவரை நினைவு மீளும் நிலைக்குத் திருப்புதல் வேண்டும்.

8) இவ்வாறான நிலையில் நோயாளியின் சுவாசம், நாடித் துடிப்பு என்பவற்றை ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒரு தடைவை பரிசோதிக்கவும். விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும். நோயாளியை வைத்தியரிடம் ஒப்படைக்கும்போது நோயளியில் அவதானித்தவற்றை வைத்தியரிடம் தெரியப்படுத்தவும்.

(அடுத்த இதழில் தொடரும்)

# கொஞ்சம் சிரிங்க



**ஆசிரியர்:** சீனப் பெருஞ்சுவர் ஏன் உலக அதிசயங்களில் ஒன்று?
**மாணவன்:** ஏன்னா சைனா தயாரிப்பில அது மட்டும்தான் அதிக நாள் உருப்படியா இருக்கு.

........................

**அம்மா:** டேய் ஏன்டா முடிய நீளமா வளர்த்துட்டு ரப்பர்பேண்ட் போட்டுட்டு திரயுற?
**மகன்:** இப்ப இதுதான் பேசன்
**அம்மா:** நாயே... உங்க அக்காவ பொண்ணுபார்க்க வந்தவங்க உன்னை பிடிச்சிருக்கெண்டு சொல்லிட்டுப் போறாங்க.

............................

**அப்பா:** கண்ணா... இரவு நித்திரை கொள்ளும்போது போன் சார்ஜ் போடாதப்பா.!
**மகன்:** ஏன்பா..?
**அப்பா:** பெட்டரி சூடான வெடிக்கவும் செய்யலாம்.
**மகன்:** அதான் நான் பெட்டரியை கழற்றி வைச்சிட்டு சார்ஜ் போடுறன்.

**ராமு:** என் பையன் பண்ண காரியத்துனால என்னால வெளியே தலை காட்ட முடியலை.."
**சோமு:** "அப்படி என்ன பண்ணிட்டான்..?"
**ராமு:** "என்னோட விக்கை எடுத்து அவன் போட்டுக்கிட்டுப் போய்ட்டான்.

.................................

**டொக்டர்:** உங்க கிட்னி பெயில் ஆகிடுச்சு.
**நோயாளி:** நான் என் கிட்னிய படிக்க வைக்கவே இல்லயே டாக்டர் அது எப்படி பெயில் ஆகும்.
**டொக்டர்:** ??????

.................................

**ரமேஸ்:** நேற்று பெண் பார்க்கப் போன இடத்துல மயங்கி விழுந்துட்டேன்டா...!"
**சுரேஷ்:** பெண் அவ்வளவு அழகா?"
**ரமேஸ்:** இல்லடா... விஷயம் தெரிஞ்சு என் மனைவியும் அங்கே வந்துட்டா...!

# மன்னா விளம்பரப் பலகை

**நீ எதை தேடிக்கொண்டிருக்கிறாயோ, அதுவும் உன்னைத் தான் தேடிக்கொண்டு இருக்கிறது. நிச்சயம் ஒரு நாள் உன்னை வந்து சேரும்...!**

எல்லாப் பயணங்களும் நாம் நினைத்த இடத்தில் முடிவதில்லை, வழி தவறிப் போகும் சில பயணங்கள் தான் நமக்கு வாழ்க்கையின் சில பாடங்களைக் கற்றுத் தருகிறது.

......................

உன் மதிப்பை முடிவு செய்வது நீதான். உன்னைச் சுற்றி இருப்பவர்கள் அல்ல.

......................

பொறாமை, கோபம், பேராசை இல்லாத வாழ்க்கைப் பாதையில் நீ பயணித்துப்பார்... நீ வாழும் வாழ்க்கைக்கு அழகான அர்த்தம் புரியும்...!

......................

மாற்றம் என்பது தொடக்கத்தில் கடினமானதாகவும், நடுவில் குழப்பமானதாகவும், இறுதியில் சிறந்ததாகவும் உள்ளது.

..............................

மனம் என்பது ஒரு அற்புதமான வேலைக்காரன், ஆனால் ஒரு பயங்கரமான எஜமான்.

..............................

மகிழ்ச்சி என்பது ஒரு பயணம், அது இலக்கு அல்ல.

..............................

நீ யாரிடம் உன் இரகசியங்களை சொல்கிறாயோ அவரிடம் உன் சுதந்திரத்தை இழப்பாய்.

..............................

யாரையும் திட்டாதே, சாபம் இடாதே,
கெடுதல் நினைக்காதே நீ எதைச் செய்கிறாயோ
அதுவே உன்னை வந்து சேரும்.
நீ மனம் வருந்தினாலே போதும் உனக்கு பாதிப்பை
ஏற்படுத்தியவருக்கு தண்டனை
கிடைத்தே தீரும்.

மனிதனைத் தவிர அகங்காரத்தால் நிரம்பியவர்கள்
இல்லை; அதனால் தான் மனிதனைத் தவிர வேறு
எவரும் இங்கே துன்புறுவது இல்லை.
நீ குற்றம் செய்யும் போது கடவுள் உன்னைப்
பார்க்கிறார்; தண்டனை பெறும்போது கடவுளை
நீ பார்க்கிறாய்.

# வரும்முன் காப்போம்

## உயிர்கொல்லி கொரோனாவிடமிருந்து

கொரோனா வைரஸ் தாக்கிவிடுமோ என்று நம்மில் பலருக்கு பயம் வந்துவிட்டது. பலர் முன்னெச்சரிக்கையாக என்ன செய்யலாம் என்று யோசிப்பதும் எமக்கு அண்டைய பகுதிகளில் பரவி விட்டதா? என்று அன்றாடம் செய்திகள் சேகரிப்பதிலும் ஈடுபடுகின்றனர்.

தடிமன், காய்ச்சல், நெஞ்சுப்பகுதி, மூக்கில் சளி, வறட்டு இருமல், தொண்டை வறட்சி, லேசான நெஞ்சு வலி, மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றவை கொரோனா வைரஸின் அறிகுறிகளாக சொல்லப்படுகிறது. இதுபோன்ற சூழலில் சில எளிய மருத்துவங்களை செய்து சாதாரண பாதிப்புகளிலிருந்து கொரோனா வரை எத்தகைய பாதிப்புகளாக இருந்தாலும் அவற்றை சரிசெய்து கொள்ளலாம்.

❖ துளசி இலைச்சாறுடன் தேன் சேர்த்துக் குடிக்கலாம். இன்னொரு நாள் இஞ்சிச்சாறுடன் தேன் சேர்த்துக் குடிக்கலாம். காலையில் நாம் அருந்தும் தேநீரில் இவற்றைச் சேர்த்தும் அருந்தலாம். இருப்பினும் சாறாக அருந்துவதே மிகச்சிறந்த பலன் தரும். காய்ச்சல், சளி தொல்லைகள் நீங்கும்.

❖ மேலும் பெருஞ்சீரகப் பொடி, மிளகுத்தூள், பனங்கற் கண்டு சமஅளவு சேர்த்து அதில் ஒரு கரண்டி அளவு சாப்பிடலாம்.

❖ அரைத் தே.கரண்டி தூதுவளைப் பொடியில் தேன் கலந்து சாப்பிடலாம்.

❖ கற்பூரவள்ளி இலைச்சாற்றைக் கற்கண்டு சேர்த்துக் குடிக்கலாம்.

❖ வெற்றிலை சாறு 15மி.லி எடுத்து மிளகுத் தூள் கால் தே.கரண்டி சேர்த்து உண்ணலாம்.

இவற்றில் ஏதேனும் ஒருமுறையை பின்பற்றுவதனால் சாதாரண நோயான சளி, காய்ச்சல், வறட்டு இருமல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு கொரோனா வைரஸ் நம்மை அணுகாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**வருமுன் காப்போம்...**
**நோயிலிருந்து விடுபடுவோம்...**

* * * *

# அழகுக் குறிப்புக்கள்

அழகை விரும்பாத மனிதர்களே இருக்க முடியாது, அதுவும் அழகான முகத்தை பெற இன்றைக்கு பலவிதமான இரசாயன கலவைகளை முகத்தில் பூசுகின்றனர். இதற்காக பலர் அழகு நிலையத்திற்கு செல்கின்றனர். ஆயினும் சருமத்தில் தோன்றும் பருக்கள், கருவளையங்கள், முகசுருக்கங்கள், கரும்புள்ளிகள் ஆகியவை நீங்குவதற்கு நாம் அன்றாடம் பயன்படுத்தும் பற்பசை (டூத் பேஸ்ட் ) மிகவும் உதவுகிறது.

நம் சருமத்தில் தோன்றும் சில பிரச்சனைகளை சரி செய்வதற்கு டூத் பேஸ்ட் ஒரு சிறந்த அழகு பராமரிப்பு பொருளாக விளங்குகிறது.

**கரும்புள்ளிகள் நீங்க**

சருமத்தில் தோன்றும் கரும்புள்ளிகள் மறைய கிண்ணத்தில் ஒரு தே.கரண்டி பற்பசை எடுத்து கொள்ளுங்கள் அவற்றில் ஒரு தே.கரண்டி எலுமிச்சைசாறு சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். பின்பு அந்த கலவை முகத்தில் தடவி ஒரு பேக்காக போடுங்கள் பின்பு 1/2 மணிநேரம் வரை வைத்திருந்து, பின்பு சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இந்த முறையை வாரத்தில் ஒருமுறை என்று இரண்டு மாதங்கள் வரை செய்து வர சருமத்தில் தோன்றும் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.

**முகப்பருக்கள் மற்றும் கருவளையம் நீங்க**

பலருக்கு இருக்கின்ற ஒரு தொல்லைதான் இந்த முகப்பரு பிரச்சனை. இவற்றை சரி செய்வதற்கு ஒரு கிண்ணத்தில் ஒரு தே.கரண்டி பற்கசை எடுத்து கொள்ளுங்கள் அவற்றில் ஒரு தே.கரண்டி தக்காளிச்சாறு சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். பின்பு இந்த கலவையை சருமத்தில் தடவி சிறிது நேரம் வரை மசாஜ் செய்ய வேண்டும் பின்பு 20 நிமிடங்கள் கழித்து சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இந்த முறையை வாரத்தில் ஒருமுறை என்று இரண்டு மாதங்கள் வரை தொடர்ந்து செய்து வர சருமத்தில் தோன்றும் பருக்கள் மறையும். மேலும் கருவளையங்கள் மறையும்.

**முகத்தில் இருக்கும் தேவையற்ற முடிகள் நீங்க:**

சிலருக்கு முகத்தில் தேவையற்ற இடத்தில் முடிகள் இருக்கும். அந்த முடிகள் உதிர்வதற்கு ஒரு தே.கரண்டி பற்பசைச் எடுத்து கொள்ளுங்கள். பின்பு அவற்றில் ஒரு தே.கரண்டி சர்க்கரை மற்றும் ஒரு தே.கரண்டி எலுமிச்சை சாறு ஆகியவற்றை ஒன்றாக கலந்து சருமத்தில் தடவ வேண்டும். இந்த முறையை வாரத்தில் இரண்டு முறை செய்து வர சருமத்தில் இருக்கும் தேவையற்ற முடிகள் அனைத்தும் உதிர்ந்து விடும். சருமமும் ஜொலி ஜொலிக்கும்.

**முகத்தில் தோன்றும் கருந்திட்டுகள் நீங்க**

சிலருக்கு சருமத்தில் அதிகளவு கருந்திட்டுகள் தோன்றும், அவற்றை சரி செய்ய ஒரு கிண்ணத்தில் ஒரு தே.கரண்டி பற்பசை சிறிதளவு உப்பு மற்றும் ஒரு தே.கரண்டி பன்னீர் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். பின்பு அந்த கலவையை சருமத்தில் தடவி 1/2 மணி நேரம் வரை வைத்திருந்து பின்பு குளிர்ந்த நீரால் சருமத்தை கழுவ வேண்டும். இந்த முறை வாரத்தில் ஒரு முறை செய்து வர சருமத்தில் தோன்றும் கருந்திட்டுகள் மறைந்து, சருமம் பொலிவு பெறும்.

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## அன்னை ஆண்டவனை அடைந்திடும் மீட்பின் பாதை

வேதத்துக்காய் உயிர்துறந்த விசுவாச விளைநிலமாம்
மன்னார் மறைமாவட்டத்தை ஆளும் மடு அன்னை
தூதன் சொன்ன வார்த்தையை ஏற்றதினால்
தூயவளாகிடப் பேறினைப் பெற்றவள்
ஆதவனை ஆடையாய் அணிந்துள்ள அன்னையவள்
அண்டி வந்தோர்க்கு அடைக்கலம் அளிப்பவள்
மா வளனை மணவாளனாக்கிட பாக்கியம் பெற்றிட்ட
மாமரித்தாய் எங்கள் மரியன்னை வாழ்க!

பன்னிரு விண்மீன் முடியினைச் சூடியவள்
பன்னிரு சீடருக்கும் அன்னையாய் ஆனவள்
வன்முறைக் கூட்டத்தின் மத்தியில் சென்று
வருந்திடும் மகனுக்கு ஆறுதல் அளித்தவள்
பொன்னரும் செபமாலை பக்தியைக் கொடுத்து
பூவுலகனைத்தையும் தன்னருளினால் நிறைத்தவள்
என்ன தவம் செய்தோம் அன்னையை நம் தாயாகப்பெற்றிட
எளிமையே அவள்வாழ்வு ஏற்று வணங்குவோம்.

பற்பல இடங்களில் காட்சிகள் அருளியே
பாவத்திலிருந்து மீண்டிட அழைப்பினை விடுப்பவள்
சர்ப்பத்தின் தலையினை மிதித்தே சாத்தானை
சடுதியாய் விரட்டிடத் தைரியம் அருள்பவள்
அற்புதங்கள் நடக்கிறது அகிலமெங்கும் அவள் பெயரால்
அன்னை ஆண்டவனை அடைந்திடும் மீட்பின்பாதை
கற்பனைக் கெட்டாத அன்னையின் பரிந்துரையே
கடவுள் எமக்களிக்கும் அருளின் திருக்கொடை.

உமிலுர் அபிராஜன் அன்ரனி பீற்றர்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

## உன்னை ஒன்று கேட்பேன் இறைவா...

மன்னிக்கத் தெரியாத இந்த
மனிதர்களுக்காகவா மாபரனே நீ
மனுவுருவானாய்...

மனிதத்தையே புதைத்து விட்டு
மதவெறியில் திரியும் இவர்களுக்காகவா
மரணத் தீர்ப்புப் பெற்றாய்...

பிறரையும் தன்போல் சிந்திக்கத் தெரியாத
சில்லறை மனிதர்களுக்காகவா
சிலுவையை ஏற்றாய்...

முழுப்பாவத்தில் மூழ்கியிருக்கும் இந்த
மூர்க்கர்களுக்காகவா நீ
மூன்று தரம் முகம் சிதற விழுந்தாய்...

களவு, பொய், போலி என வாழுமிந்த
கல்நெஞ்சர்களுக்காகவா நீ
கல்வாரியில் நடந்தாய்...

அறவே உன்னை ஏற்காத
அவிசுவாசிகளுக்காகவா நீ
ஆணியில் அறையப்பட்டாய்....

முழுதுமுனை நம்பாத
மூட நெஞ்சர்களுக்காகவா நீ
முள்முடி தரித்தாய்...

பணத்துக்கும் புகழுக்கும்
பறிபோகும் இந்த
பாவி மனிதர்களுக்காகவா
பரமனே நீ பலியாகி மரித்தாய்...

உன்னையே கொன்று
தண்ணீரையும், குருதியையும்
தனித்தனியாய் பிரித்தெடுத்தவர்கள்
எங்களை என்ன செய்ய மாட்டார்கள்..?

உன்னை ஒன்று கேட்பேன்
திருந்தாத மனிதருக்காய்
திரும்பவும் நீ வருவாயோ..?

"மாதோட்ட மகதி" (பிருந்தா மோசேஸ், வட்டக்கண்டல்)

## மே – 18...

மறக்க முடியுமா மனிதனாக...
மறந்தால் இருக்க முடியுமா தமிழனாக...!
மாண்ட தமிழர்களையும், மறைந்த உறவுகளையும்
மறந்து போவானா...மறந்து போனவன்
தமிழன் ஆவானா...?

இன வெறியால் கொன்ற தினத்தை
கொலைகாரக் கூட்டம் கொண்டாடி மகிழ்ந்த நாள்...!
தமிழர் மனம் உருகி, மேனி கருகி,
நடை பிணமாக நகர்ந்த நாள்...!
குடும்பமாக வந்தவர்களையும் கூட்டமாகக் கொன்று
குவித்ததைச் செய்தியிலும் இணைய தளத்திலும்
பார்த்து படித்துத் துடித்துக் கூக்குரலிட்ட நாள்...!

குழி வெட்டிப் புதைபதற்குக்கூட குடும்பத்தில் ஓர் உயிர் இல்லாமல்
குடும்பத்தோடு சிதைந்து போன நாள்...!
நடப்பதற்குத் திடமில்லாமல் கடப்பது சடலமென்று அறிந்தும்,
உயிரைப் பிடித்துக்கொண்டு ஓடிய நாள்...!

பிணந்தின்னிக் கழுகினம் சரண் புகுந்த உறவுகளின்
சதை நெரித்து உயிர் குடித்த கோர நாள்...!
ஐ.நா. துணை வரும் என்றும் அமெரிக்க ஆதரவு தரும்
எனவும் நம்பி நாம் ஏமாந்து போன நாள்...!

வெள்ளைக்கொடி கொண்டு வேதனை சுமந்து போன எம்மவர்களை...
சுட்டுப் போட்டு வெற்றி என்று எதிரிகள் கொக்கரித்துக்
கொண்டாடிய நாள்...!
சின்னஞ்சிறு பாலகர்களை சித்திரவதைச் செய்து
முழங்காலில் நிக்க வைத்து பிடரியில் சுட்டு
பேடிகள் பெருமை கொண்ட நாள்...!

புனர்வாழ்வு என்ற பெயரில் உயிரோடு கைது செய்து உயிர் போகும் வரை
சித்திரவதைச் செய்து சீரழித்த நாள்...!
அகதி என்று எம் இனத்துக்கு பெயர் சூட்டி முட்கம்பிகளுக்குள்
முடங்கிக் கிடந்தே அடங்கிப் போன அவல நாள்...!

இறக்கும் நிலையிலும் எமது சகோதரிகளையும் இழுத்துச்
சென்று இச்சை தீர்த்தபின் கொன்ற கொடிய நாள்...!
நிறைமாதக் கர்ப்பிணியாகாமல் குறை மாதமாகவே
குழல் பீரங்கிகள் பிரசவம் பார்த்து
துடிக்கத் துடிக்க கொன்ற நாள்...!

மூச்சிழந்த தாயின் மார்பில் முகம் புதைத்து
பால் குடித்த குழந்தை முகம் பார்த்து
மூச்சடைத்து நிர்க்கதியாய் நாம் நின்ற நாள்...!
மறக்க முடியுமா மனிதனாக... மறந்தால் இருக்க முடியுமா தமிழனாக...!
ஏழு ஜென்மம் பிறந்தாலும்...ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும்
மறக்க முடியுமா மனிதனாக...மறந்தால் இருக்க முடியுமா தமிழனாக...!

## அன்னையே! எம் அன்புள்ள தாயாரே..!



அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து நல்
அறமதில் அகமகிழ்வு கொண்டு நல்
மறைபணியாற்றி திகழ்ந்து பல
இறைமக்கள் வாழ்வு மலர தினம்
நிறைகுறையா பணிபுரிந்த அன்னையே நீர்வாழ்க..!

அல்பேனியா நாட்டில் அரசகுலத்தில் பிறந்து
அகதிகளாய் அலைவோர்கு அன்புப்பணியாற்ற
அருட்சகோதரியாய் உம்மை உருவாக்கி
அருள் பணியாற்றிய அன்னையே நீர் வாழ்க..!

கொல்கொத்தா நகரில் சேரிப்புறமக்களை உம்
சேவைக்கென தெரிந்தெடுத்து கண்
இமை மூடாமல் இரக்கத்தோடு அணைத்த உம்
இருகரங்களை பற்றி கொள்ள தேடுதம்மா எம்மனம்.

சேரிப்புற மாந்தரின் தேவைகள் அனைத்தையும்
தேடிதேடி கண்டு ஓடிஓடி பணிபுரிந்த உம்
ஒப்பில்லா கால்தடம் பற்றி கொள்ள
ஏங்குதம்மா எம் உள்ளம்..!

பாமர மக்களின் பசி போக்க நீர்
பாதையோரம் கையேந்தி நின்றவேளை
பார்த்தவன் எச்சிலால் உம்மை நனைக்க அதை
பாசத்தோடேற்ற நீர் - தினம்
பசியோடிருப்போருக்கு பானம் கேட்டீரே - உம்
பாசமான உள்ளத்தை பற்றிட வரம் தாருமம்மா..!

நேசமான உள்ளம் கொண்டோர் பலர்
பாசமான உம் பரிவுள்ளம் கண்டு
பரிவோடே பல உதவிகள் புரிந்திட அதை நீர்
பாசத்தோடு ஏற்றுக்கொண்டீரம்மா..!

வைத்தியரால் கைவிடப்பட்டோர்..! பைத்தியமாக்கப்பட்டோர்..!
அன்பிற்காய் அலைபவர்..! அனாதைச் செல்வங்கள்..!
கைவிட்ட பாலக செல்வங்கள் கைகளால் தொடமுடியா
தொழுநோயாளர்கள் அப்பப்பா! உம் சேவைகளை
அடுக்கிக் கொண்டேயிருக்கலாம்..!

அன்பே! அன்னையே! அன்னை இல்லமதை நீர் அமைத்து..!
அன்போடு அவர்களை தொட்டு தொட்டு பணிபுரிந்த உம்
கை விரல் பத்தையும் புனித பொருளாக்கிட வேண்டுமம்மா..!
உலகெல்லாம் பல இல்லமிருந்தாலும் - உம்
இல்லம் போல் வேறேதும் உலகிலே இல்லையம்மா..!

அழுவோர்க்கு அன்னையாய் : விழுவோர்க்கு ஆதரவாய்..!
தொழுவோர்க்கு அன்பு தாயாய் அருள் மழை பொழிந்ததம்மா..!
ஏட்டு துணிகூட உடலில் இல்லாமல் இருப்போரை நீர்
தொட்டு தூக்கி துடைத்தெடுத்திட்ட உம் புனிதமே புனிதமம்மா..!

வெள்ளை சேலை மூன்றையும் சிலுவையும், செபமாலையுமே உம்
சொத்துக்கள் ஆனதம்மா..! இத்தனையும் - உம் ஆன்மாவை
கழுவ போதுமென்று நீர் உணர்ந்து வாழ்ந்ததுபோல் - எம்
உள்ளங்களை மாற்றி நாம் வாழ திரு மகனிடம் எமக்காய்
தினம், தினம் வேண்டிக்கொள்ளுமம்மா..!



அ.ஜஸ்மின் ஷரோன்
ஆவணம், நானாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.212

## சபை உரையாடல் (அதிகாரம் 1 முதல் 6 முடிய)

உங்கள் விடைகளை ஆடி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | | | | | 03 |
| | | | 04 | | * | | | | 05 | |
| | 06 | | | | | | | * | * | |
| | * | * | | | | | 07 | | | |
| | | | 08 | | | 09 | | | | |
| 10 | | | | | | | | | | 11 |
| | | | | 12 | | | | | * | |
| | 13 | | 14 | | | * | | | | 15 |
| | | | | | | 16 | | | | |
| | | 17 | | | | | | | 18 | |
| 19 | | | | 20 | | | | * | | 21 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. முற்காலத்தவரைப் பற்றிய நினைவு................. யாருக்கும் இல்லை.
2. நான்.................... மூடத்தனம், மதிகேடு ஆகியவற்றை ஆராயத் தலைப்பட்டேன்.
6. கற்களை எறிய ஒரு காலம், கற்களைச்............. ஒரு காலம்.
7. .................... வாக்கை நிறைவேற்றாமற் போவதைவிட வாக்குக்கொடாமல் இருப்பதே மேல். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. ஏனெனில்.................... அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ளது.
10. கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் .............ச் செய்கின்றார்.
12. காலத்தைப் பற்றிய.................... மனிதருக்குத் தந்திருக்கிறார்.
16. நடந்ததையே கடவுள்................ மீண்டும் நடைபெறச் செய்கிறார்.
19. அது அவருக்குக் கடவுள் .................... நன்கொடை.

### மேலிருந்து கீழ்

1. ஒளி........... மேலானதாய் இருப்பதுபோல ஞானமும் மதிகேட்டை விட மேலானதாய் இருக்கக் கண்டேன்.
2. ....................கண்கள் ஒளி படைத்தவை.
3. பாவம் செய்கிறவருக்கோ ..................ச் சேர்த்து வைக்கும் வேலையைக் கொடுக்கிறார்.
11. கடவுள் முன்னிலையில்.............ப் பாராமல் எதையும் பேசாதே.
12. புதியது என்று.................. எதுவுமே இல்லை.
13. முற்காலத்தவரைப் பற்றிய ................... இப்போது யாருக்கும் இல்லை.
14. தம் மறைவிற்குப் பிறகு உலகில் என்ன நடக்கும் என்பதை யாரால் தெரிந்துகொள்ள. .................. .

### வலமிருந்து இடம்

3. இவ்வுலகில் செய்யப்படும் ஒவ்வொரு.................. கவனித்தேன்.
4. யாவும் ...................ப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்.
5. நேர்மையும் ................... இருக்க வேண்டிய இடங்களில் அநீதியே காணப்படுகின்றது. (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன).
8. உண்டு குடித்து உழைப்பால் வரும் ...................த் துய்க்கும் இன்பம் எல்லா மனிதருக்கும் கடவுள் அளித்த நன்கொடை.
11. மனிதர் தாம் உயிரோடு இருக்கும்போது இன்பம் துய்த்து மகிழ்வதைவிட ................... அவருக்கு வேறொன்றும் இல்லை.
12. வருந்தி..................தம் உழைப்பினால் அடையும் பயன் என்ன?
15. இல்லாத ஒன்றை அடைய விரும்பி அலைந்து.................விட உள்ளதே போதும் என்ற மனநிறைவோடு இருப்பதே மேல்.
18. வயது சென்ற ................... கேளாத முட்டாள் அரசரைவிட விவேகமுள்ள ஏழை இளைஞனே மேலானவன்.
21. சொல் மிகுமானால்.................. வெளியாகும்.

### கீழிருந்து மேல்

7. ஏனெனில் அவர்கள் இவ்வுலகில் நடக்கும்.......... செயல்களைப் பார்க்கும் நிலையில்லை.
8. இன்பம் நன்மை................................ என்றேன்.
9. ஞானத்தையும்.............. பற்றித் தெரிந்துகொள்வதில் என் சிந்தனையைச் செலுத்தினேன்.
12. உண்பதையும், குடிப்பதையும் தம்............. .வரும் இன்பத்தைத் துய்ப்பதையும்விட நலமானது மனிதருக்கு வேறொன்றுமில்லை.
17. போருக்கு ஒரு காலம் .............................க்கு ஒருகாலம்.
19. சிறையில் கைதியாயிருந்தவர்...................... ஏறியதும் உண்டு.
20. பேச்சு நீள நீள அதன் பயன்.................. கொண்டே செல்லும

* * * * *

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 210 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
அ. அகஸ்ரீனா,
155,மடுக்கரை,நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
V.கெலன் தர்ஷிகா,
சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
வி.மேரிறொஜினா,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடுக்கோவில், மடு.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 81 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 76 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.210ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. C.சந்திரகுமார் சுகிர்தா, தலைமன்னார் கிராமம்.
2. ஜெ.டிலைக்சனா, புதுக்கமம், உயிலங்குளம்.
3. அகிலன் நிஷாந்தினி, 8ம் வட்டாரம், பேசாலை,
4. N.C.யூலியானி றோச், பள்ளிமுனைகிழக்கு.
5. சி.பாஸ்கர் றோச், பள்ளிமுனைகிழக்கு.
6. V.டிவைனா குருஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
7. S.வரதன் குருஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
8. A.V. நிதுன் பெர்னாண்டோ, மன்னார்.
9. ப.கிறேஷியன் கூஞ்ஞ, தலைமன்னார்.
10. P.வரவணிக்கா,பெ.பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
11. ப.மேரி ஜீவி துரம், தலைமன்னார்.
12. D.P.சாறா, மாவிலங்கேணி, முருங்கன்.
13. யே.யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
14. புஸ்பா சேவியர், திருகோணமலை.
15. ஞா.வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
16. பி.கிறின்சியா, மடுறோட்பங்கு.
17. ஞானராஜ் எய்லின் ஜொசினி, குழந்தையேசுபுரம்.
18. லதா ஜஸ்ரின், உமநகரி, நானாட்டான்.
19. அ.ஒசின்சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
20. அ.டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
21. அ.ஜோண்சன் செல்வம், சாம்பன் கட்டைக்காடு.
22. அ.டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
23. வ.பிரசாந்தன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. றொ.பற்றிக் விதுசன், சாம்பன் கட்டைக்காடு.
25. சு.ஜெகநாதன், மடுக்கரை, அளவக்கைப்பங்கு.
26. அ.வலஸ்ரீனா, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
27. றபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
28. அ.சங்சிபன், சாளம்பன், ஆண்டான்குளம்.
29. P. போல் றாஜ், நெடுங்கண்டல், அடம்பன்.
30. அ.றோஸ்மேரி, சாளம்பன், ஆண்டான்குளம்.
31. அ.சங்சிகா, சாளம்பன், ஆண்டன்குளம்.
32. போ.றொசிற்ரா, நெடுங்கண்டல், அடம்பன்.
33. A.அமிர்த நாதன், சாளம்பன், ஆண்டன்குளம்.
34. அ.சிறஞ்சி, சாளம்பன், ஆண்டன்குளம்.
35. அ.மேரி மாக்கிறேற், சாளம்பன், ஆண்டன்குளம்.
36. திருமதி.அன்னறோஸ் கூஞ்ஞ, தலைமன்னார்.
37. S.அல்விறெட் சில்வா, தலைமன்னார்.
38. ஆ.றூபன் ஜீசஸ் டலிமா, ஆனாள்நகர், வங்காலை.
39. அ.இராசநாயகம் சில்வா, பெ.பண்டிவிரிச்சான்.
40. றூ.மேரிபிறக்சி டயஸ், ஆனாள்நகர், வங்கலை.
41. றூ.ஷறிஸ்மா டயஸ், ஆனாள்நகர், வங்கலை.
42. எ.ஜெய்மென்ராஜா, புத்திரர்கண்டான், முருங்கன்.
43. எ.ஜெனோலின், புத்திரர்கண்டான், முருங்கன்.
44. அ.புகழ்நிலா, பள்ளக்கமம், முருங்கன்.
45. அ.சுகேந்திரா, பள்ளக்கமம், முருங்கன்.
46. ஜெ.தன்ஷிகா, புதுக்கமம், உயிலங்குளம்.
47. செ.வளன் நிலுஜன் துரம், மரியாள் விதி, தாழ்வுபாடு.
48. செ.அஞ்சலா டயஸ், மரியாள் விதி, தாழ்வுபாடு.
49. செ.ஆன் நியூசிக்கா துரம், மரியாள் விதி, தாழ்வுபாடு.
50. K.R. கலிஸ்ரஸ், சிதம்பரபுரம், ஆசிக்குளம்.

# வாழ்க்கையின் நியதி

எத்தனை தடவை புத்தகத்தை புரட்டிப் புரட்டிப் படித்தாலும் நினைவுகள் எல்லாம் நண்பி கவிதாவின் ஞாபகமாகவே இருந்தது வனிதாவிற்கு. அவளுக்கு ஏன் இந்த நிலைமை! அவளின் நல்ல குணத்திற்கும், நல்அறிவிற்கும், தூய்மையான உள்ளத்திற்கும் ஏன் இப்படியான சித்திரவதை கடவுளே இப்படி யாருக்குமே வரக்கூடாது! என்று தன் உள்ளத்துக்குள்ளே புழுங்கிப்,புழுங்கி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் நண்பி வனிதா. அவளைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தவள் அவளின் கடந்த கால வாழ்க்கைக்குள் மூழ்கிப் போனாள்.

கல்லூரி படிப்பை தொடர முடியாமல் இடையில் படிப்பை நிறுத்தியவள் கவிதா. வீட்டில் வறுமை நிலை கொண்டிருந்தாலும் கடற்தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்றி கௌரவமாக வாழ்ந்து வந்தது அவளின் குடும்பம். குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளை ஆதலால் எந்தக்குறையும் இன்றி வாழ்ந்தவள் அவளின் அழகிற்கும், அறிவிற்கும், நல்ல குணத்திற்கும் பல இடங்களில் இருந்து அவளுக்கு வரன் கேட்டு வந்தனர். எவ்வளவு வசதி வாய்ப்பு மிக்க இடத்தில் இருந்து பெண் கேட்டு வந்தாலும் எல்லாவற்றையும் விட்டு விட்டு தன் தாய் மாமன் மகனையே திருமணம் செய்து கொண்டாள்.

திருமணம் கோலாகலமாக நடந்தேறியது இரு வீட்டாரும் நிறைந்த மகிழ்வுடன் நிகழ்வுகளை நடத்தினர். கணவர் அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வந்தார். அவருடைய வீட்டிலும் அவர் ஒரே ஒரு மகனாதலால் பெண் இல்லாத குறையை தன் மருமகளுடன் போக்கி அவளை ஓர் மகளைப் போல பாசத்துடன் நடத்தி வந்தனர் மாமாவும், மாமியும். இதனால் குடும்பம் மிகுந்த சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்தினர். திருமணம் நடந்தேறி இரண்டு வருடங்கள் நிறைவடைந்தது. மூன்றாவது வருடமாகிக் கொண்டிருந்தது என்றாலும் கவிதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க மிகவும் தாமதிக்கத் தொடங்கியது. இதனால் மற்றவர்கள் இவளை ஏளனமாக பார்க்கத் தொடங்கினார். சனக்கூட்டம் நிறைந்திருக்கும் இடங்களில் இவளின் காதிற்கு எட்டக் கூடியவாறு பல வேதனையான கதைகளைக் கூறி அவளை ஏளனப்படுத்தினர். வைபவங்கள், விழாக்களில் இவளை புறந்தள்ளி, ஒதுக்கி வந்தனர். திருமண நிகழ்வுகளில் இவளின் வரவை நிராகரித்தனர். இதனால் மனமுடைந்த கவிதா தனக்குள்ளே வேதனைப்பட்டு, அழத்தொடங்கினாள். குழந்தை பாக்கியம் இல்லாத என்னை இவ்வளவு கேவலமாக சமுதாயம் ஒதுக்கி வைக்கிறதே என்று தனக்குள்ளே நாளும், பொழுதும் கவலைப்பட்டு, யாரிடம் சொல்லி அழுவது என்று தெரியாமல் தவித்தாள்.

இதனால் மன அழுத்தம் அதிகரித்த கவிதாவிற்கு இரவில் நித்திரை வர மறுத்தது. காலையில் அலுவலகம் சென்று மாலையில் வீட்டிற்கு வரும் கணவனின் வேலைப்பழு ஒருபக்கம் நான் என் நிலைமையை இவரிடம் கூறினால், வேதனைப்பட்டு அழுவாரே என்று கணவனிடமும் கூற முடியாமல் தவித்தாள் கவிதா. ஆனால் கணவனின் அன்பும், பாசமும், எப்போதும் மாறாமல் இருந்தது. இதனால் அவளின் மனம் சற்று ஆறுதல் பட்டாலும், கேலிப் பேச்சுக்களும், நிராகரிப்புக்களும் இவளை தினம்,தினம் வாட்ட மன அழுத்தம் மேலிட்டவள் இரவில் நித்திரையின்மையால் மிகவும் அவதிப்பட்டவளாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால்.

உளநல ஆற்றப்படுத்தலுக்கு உட்பட்ட கவிதாவிற்கு நாளாந்தம் உள ஆற்றுப்படுத்தல் நடை பெற்றது. எனினும் அவளிற்கு நித்திரை வர மறுத்ததால் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டிய நிலமைக்கு அவள் தள்ளப்பட்டாள். இதனால், மனமுடைந்த அவள் கணவன் இன்னும் அதிகமாக அவளை அன்பு செய்யத் தொடங்கினான்.

மனைவியை அருகில் இருந்து அன்போடு கவனித்துக் கொண்டான். சாப்பிட மறுத்த மனைவியை வேளா, வேளைக்கு உணவு கொடுத்து, மாத்திரைகளை கவனமாக கொடுத்து தூங்கச் செய்தான். அடுத்தவரின் அறிவு கெட்டதனமாக பேச்சுக்களை கவனிக்காமல் இறைவனிடம் வேண்டும் படி அன்பு கலந்த அன்னியோன்ய வார்த்தைகளை அவளிடம் கூறி அவளின் மனதைத் தேற்றினான். இவ்வாறானதொரு கணவன் தனக்கு கிடைத்தது மாபெரும் இறைவரம் என்று எண்ணி அவனை அதிகமதிகமாக நேசித்து அவனின் அன்பில் வாழ்ந்த கவிதாவிற்கு திடீரென வயிற்று வலி ஏற்பட்டு தாங்க முடியாமல் அழுதால். இதையறிந்த அவள் கணவன் செய்வதறியாது திகைத்து நின்றான். என்ன செய்வதென்று புரியாமல் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தான்.

தீவிர சிகிச்சை இடம்பெற்றது. கவிதாவினை பரிசோதித்த வைத்தியர் கவிதாவின் வயிற்றுப் பகுதியில் பெரிய கட்டியொன்று வளர்ந்திருப்பதாகவும் முக்கிய பகுதியாகிய கர்பப்பையை நோக்கி வளர்ந்திருப்பதால் கர்பப்பையையும் சேர்த்து வெளியேற்ற வேண்டும் என்று கூறினார். இதனால் குடும்பமே குழம்பி நின்றது. இந்த நிலமை யாருக்கும் வரக்கூடாது ஆண்டவரே என்று மனதிற்குள் விம்மிய வனிதா அவளின் கடந்த கால வாழ்க்கையில் இருந்து மீண்டவளாய் என்ன முகத்துடன் அவளை நான் பார்ப்பது அவளை பார்த்து என்ன வார்த்தைகளை கூறுவது என்று எண்ணியவள் புத்தகத்தை மூடி வைத்து விட்டு நண்பியை பார்ப்பதற்காக வைத்தியசாலையை நோக்கி ஓடினா ஓடிச் சென்று வைத்தியசாலையில் இருந்த கவிதாவை பார்த்தவள் கடவுளே கவிதாவை நீர் கைவிட்டு விட்டீரா? என்று எண்ணியள் கவிதாவின் கைகளை இறுகப்பற்றிப் பிடித்தவளாய் கலங்கிய கண்களுடன் வார்த்தைகள் எதுவும் வெளிவராத நிலையில் கடவுளே! வாழ்க்கையின் நியதி இதுதானா? என்று தன மனதிற்குள் எண்ணியவளாய் மௌனித்து நின்றாள். * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 08 1978

உதிர்வு 29 03 2018

### அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் தவராஜா (தவம்)

(முருங்கன்கமம்)

இரண்டு ஆண்டுகள் சென்றாலும் எம்மைவிட்டு அகலுமோ உன் அன்பு முகம் பல்லாண்டு மகிழ்ந்திருப்போம் என நினைத்தோம். நீ பாதியிலேயே எம்மை பரிதவிக்கவிட்டு சென்று விட்டாயே. வாழ்ந்த காலம் போதும் என்றா விரைந்து சென்றாய் நீ விதைத்துப் போன மரண விதியால் சிதைந்து போனோமே சுகமாகி விடு வருவாய் என்று காத்திருந்தோம் கனப்பொழுதில் உன் உயிர் பிரிந்ததே தவம் உன் ஆன்மா ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாற வேண்டி செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்பு அம்மா, சகோதரங்கள், மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்கள்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16 03 1958

விண்ணில் 08 03 2012

### திருமதி. கொன்சால் சந்தானாள் (மலர்)

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

அம்மா! அன்பின் பிறப்பிடம், அகிலத்தின் முதலிடம்,
அணைப்பதில் தனியிடம் – என்றும் எமக்கு புகலிடம்
நீங்களில்லா பூமியிது பேரிருளாய்த் தோன்றுதம்மா
நாங்களில்லா எம் குடும்பம் வேதனையால் வாடுதம்மா
வருடங்கள் எட்டினை தாண்டிப் போனாலும் – எம்
வருத்தங்கள் ஒருநாளும் தாழ்ந்து போகாதம்மா
எங்கள் நிலைமைகள் எங்கெங்கோ அழைத்துச்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை
அழைக்க மறக்காதம்மா...

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 02 1947

மறைவு 03 02 2020

### அமரர். சவரிமுத்து ஆரோக்கியநாதர்

"உயிருள்ளவரை நேசித்தோம், இறந்த பின்னும் உம்மை மறவோம்"

பாசத்தை உம் வளர்ப்பில் நாம் கண்டோம் தியாகத்தை
உம் செயலில் நாம் கண்டோம் எட்டு ஆண்டுகள்
மறைந்து போய்விடினும் ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில்
அப்பா! எம் விழி ஓரத்தில் இருக்கிறீர்கள். துயர்சுமந்து
எமக்காய் திரியாகி ஒளி தந்தீர் வலிகளை நீர் சுமந்து
வழிகளை எமக்குக் காட்டினீர். இன்று ஆயனில்லா ஆடுபோல்
அந்தரிக்கின்றோம். நித்தமும் உம் அன்பைப் பெற்றிட
ஆசிக்கின்றோம். நித்தியமாய் நின்ஆன்மா இறைவனில்
இளைப்பாற நித்தமும் இறைவனை நெஞ்சுருக
இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அண்ணன் குடும்பத்தினர் (நீக்கிலாபிள்ளை)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 07 1967

உதிர்வு 17 03 2017

### திரு. சந்தியோகு கியூபட் பறுனாந்து

(கிராம சேவையாளர் - பேசாலை)

எண்ணிப் பார்க்கவும் இயலாத ஏக்கத்தை
எமக்களித்துவிட்டு எட்டாத தூரம் சென்றது ஏனோ அப்பா!
நீயில்லா எம் வாழ்வு நிலை தடுமாறி கடந்து செல்ல
நின் குரலில்லா உலகில் நிம்மதியேதும் இல்லை அப்பா
நீர் எம்மை விட்டு பிரிந்தால் எம் வாழ்வும்
இருளாய் போனதப்பா வாழ்வினில் நீர் எமக்கு
கற்றுத் தந்தவை வழிநெடுகில் எம்கூடவர
ஆறாத வலியின் சுவடுகளுடன்
பிரார்த்திக்கின்றோம் உம் ஆத்ம சாந்திக்காக.

பிரிவால் நினைந்துருகும்
குடும்பத்தினர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 12 06 1958

இறப்பு 30 03 2018

### அமரர். திரு.வைத்தியநாதன் (நாதன்)

அப்பா நீர் வீட்டு சென்று இரண்டு வருடமானது நீர் இல்லா
வீடு வீடாய் இல்லை வீடெல்லாம் மழலைக் குரல் என்றாலும்
ஏதோ ஒரு இடத்தில் அழுகுரல் கேட்ட வண்ணம் - உம்
நினைப்பீல் காலை எழுந்ததிலிருந்து நித்திரைக்குச் செல்லும்
வரைக்கும் எத்தனை முறை உம் நினைவுகள்!
கவலைகள், கண்ணீர்கள் இழந்து விட்டோம் என்பதா!
உம்மோடு நாங்கள் சேர்ந்து வாழக்கிடைக்கவில்லை என்பதா!
ஆறதல் அடைய முடியாது பரிதவிக்கின்றோம் அப்பா இல்லாப்
பிள்ளைகளாய்! நீர் எங்கிருந்தாலும் இறைவன் அருகில்
அமைதியுடன் வாழ வேண்டுகின்றோம் குடும்பமாக.
யார் இருந்தாலும் எது இருந்தாலும் யாருமில்லா
அனாதை போல் இருக்கிறது வீடெங்கும்.

பிரிவால் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள், மருமகள், பேர்த்தி மற்றும் உறவுகள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 22 04 1945

இறப்பு 01 05 2019

### திரு.அலஸ் பிரான்சிஸ் (ராஜா)

(பெரியகமம், மன்னார்)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பின் இலக்கணமாய், அமைதியின் பிறப்பிடமாய்,
பாசத்தின் மகுடமாய், நற்பண்பின் உறைவிடமாய், எம்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் நல்வாழ்விற்கு
வழிகாட்டியாய், இரக்கமும் நாம்வாழ வழிவகுத்த
ஐயாவே
புன்சிரிப்போடு விளிமூடி விட்டீர்.
உம் பிள்ளைகள்நாம் புழுவாய் துடிக்கின்றோம்.
உம் ஆன்மா அமைதியில் இளைப்பாற

பிரிவால் நினைந்துருகும்
பாசமிகு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 3ம் பக்கத் தொடர்ச்சி வாழ்வுதய மனிதநேய பணி....

மன்னார் மாவட்ட ஆயரின் நிதி உதவியிலிருந்தும், கரிற்றாஸ் சிறிலங்கா செடக்கினுடைய நிதியுதவியில் இருந்தும், சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் உடைய நிதி உதவியிடமிருந்தும் Fundation, Sroma Foundation போன்றவற்றின் மூலம் இந்நிவாரணப் பொருட்களை வழங்கியதோடு, மக்களுக்கான விழிப்புணர்வுகளும் இந்நிதியுதவி ஊடாக வழங்கப்பட்டன.

மக்களின் சுகாதார நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் முகக்கவசங்களும் தொற்று நீக்கக் கூடிய சவர்க்காரங்களும் வழங்கப்பட்டது. பொதுமக்களுக்கு அவர்களின் தேவையை ஓரளவு நிறைவு செய்துள்ள வாழ்வுதயம் குழுவினரை மன்னா பாராட்டி மகிழ்கின்றது.

## 3ம் பக்கத் தொடர்ச்சி திரு.எஸ்.செபஸ்ரியான்....

கொழும்பு பத்தரமுல்லவில் உள்ள கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட இச்சான்றிதழ் ஆனது முசலி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இந்தக் கலைஞருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. மேலும் முசலி பிரதேச செயலகத்தினால் ஒரு நினைவுச் சின்னமும் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் சிலாவத்துறை பங்கு ஆலயத்தின் சங்கிர்த்தமாக பல ஆண்டு களாக சேவை ஆற்றி வருகின்றார். இந்தக் கலைஞருக்கு மன்னா மனமார்ந்த வாழ்த்துக் களை தெரிவித்து நிற்கின்றது.

## 3ம் பக்கத் தொடர்ச்சி – மன்னார் துயர் துடைப்புச்....

அத்துடன் நெதர்லாந்து நன்கொடையா ளரிடமிருந்து உதவிப்பெற்று ம.து.ம.ச வில் உதவி பெறும் 65 தாய் தந்தையற்ற வறிய மாணவர்களும், ஆதவற்ற வறிய மாணவர்களுக்கு சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது இதற்கு ரூபாய் 430,000 செலவு செய்யப்பட உள்ளது. அத்துடன் 24.04.2020 கொழும்பு தேசிய சமாதான பேரவை நிதியுதவியுடன் மாவட்ட சர்வமத குழுவுடன் இணைந்து மாற்றுத் திறனாளிகள், மாதர் பிரிவினர் 45 குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கியுள்ளது. இதற்கு 95,000 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிட்னி அவுஸ்ரேலியா கத்தோலிக்க சங்கத்தின் நிதியுதவிப் பெற்று வைகாசி மாத நடுப்பகுதியில் மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவு எல்லை கிராமங்களில் உள்ள குடும்பங் களுக்கு உலர் உணவு வழங்கப்பட ேள்ளது. இதற்கு 150,000 ரூபாய் செலவு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் ம,து,ம.ச சங்கத் தலைவர் வண.பிதா. தி.நவரெட்ணம், சங்க ஆலோசகர் வண.பிதா.அ.சேவியர் குரூஸ், உபதலைவர்கள் சிறி விமல ரட்ண தேரோ, ஜனாப். ஆ.ஆ.றம்சீன் திரு.S.இராம கிருஸ்னண் அத்துடன் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. தலைவர் வண.பிதா. தி.நவரெட்ணம் தெரிவிக்கையில் கடந்த 35 வருடங்களாக ம.து.ம.ச துயர் துடைப்பு, மறுவாழ்வு பணிகளில் முன்னேடுத்து வருவதாகவும், கொரேனா காரணமாக நிதி வழங்கிய நன்கொடையாளர் களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## 3ம் பக்கத் தொடர்ச்சி – பொதுநிலையினர் குடும்ப....

அவ்வகையில் மன்னார் மறைமாவட்ட குடும்ப நல பணியகத்தின் புனித வின்சன் டி போல் சபை மூலமாக சில நன்கொடை யாளர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் 280குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட் களை வழங்கியுள்ளனர். புனித வின்சன் டி போல் சபை பணியாளர்கள் மறை மாவட்டத்தின் சில பங்குகளிலுள்ள ஏழை மக்களை இனங்கண்டு அவர்களுக்கு ரூபாய் 1000 பெறுமதியான நிவாரணப் பொதிகளை வழங்கினார்கள். மக்களின் நலன் கருதி அவர்களுக்கு உதவி செய்த மன்னார் மறைமாவட்ட குடும்பநல பணியக இயக்குனர் அருட்பணி. எமிலியானுஸ் பிள்ளை அடிகளாரையும், ஏனைய பணியாளர்களையும் மற்றும் நன்கொடை யாளர்களையும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்தி பாராட்டு கின்றோம்.

## 3ம் பக்கத் தொடர்ச்சி திருபாலத்துவ சபை........

இப்பயிற்சிக் கருத்தமர்வில் 84 திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். இந்நிகழ்வின் இறுதி நாளாகிய 09.02.2020 அன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.


திருப்பலியின் பின்னர் முதலாவது பயிற்சி கருத்தமர்வில் பங்குபற்றிய ஊக்குவிப்பாளர் களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஆயர்தந்தை அவர்களினால் ஆசியுரை வழங்கப்பட்டது. அருட்பணி. றஜீவன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். பின் அருட்பணி. ச.சவுல்நாதன் அடிகளாரால் நன்றி உரை நிகழ்த்தப்பட்டது. பினனர் ஆயர்தந்தை அவர்களினால் அருட்பணி. றஜீவன் அடிகளார் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டது. அத்துடன் ஊக்குவிப்பாளர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார். பின் ஆயர்தந்தையுடன் இணைந்து அனைவரும் குழுவாக புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்வுகளை எல்லாம் மன்னார் மறைமாவட்ட பாப்பிறை மறைபரப்பு சபைகளின் இயக்குனர் அருட்பணி. ச. சவுல்நாதன் அடிகளார் மிகச் சிறப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நீங்காத நினைவுகள்

## 1ஆம் ஆண்டு மற்றும் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு.மாதடிமை அமிர்தநாதன்**

தோற்றம் 13.06.1942 — மறைவு 24.03.2019

**திருமதி. அமிர்தநாதன் மேரிராணி**

தோற்றம் 24.08.1946 — மறைவு 08.08.2014

(பொன்தீவுகண்டல்)

பூவுலக வாழ்வைத் துறந்து மறுவுலக வாழ்வைத் தேடிச்சென்ற அப்பா! அம்மா! விசுவாச விதையை எங்களில் விதைத்து எம்மை வளர்த்தெடுத்து உருவாக்கியவர்களே, உங்களின் பண்பும் பாசமும் அன்பும் என்றும் எம் உள்ளங்களில் நிலைத்து நிற்கும். உங்களை பிரிந்த துயரத்தின் அதிர்வுகள் நெஞ்சின் அலையாக ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. உங்களின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சூசையப்பு சிப்ரியான் லெம்பேட்**

"வாழ்வு மாறுபடுவதே அன்றி
அழிக்கப்படுவதில்லை"

(மூர்வீதி, மன்னார்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

மலர்வு 18.10.1955 — உதிர்வு 25.03.2016

பிரிவால் நினைந்துருகும் : குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 10 10 1959 — விண்ணில் 31 03 2019

**மருசலீன் சகாயமேரி பிகிறாடோ**

(பள்ளிமுனை)

பாசமாய் எம்மை வளர்த்தீர்கள் இவ்வுலகில் நாம் வாழ பலவற்றையும் கற்றுத் தந்தீர்கள். சிதைந்து போனோமே அம்மா நீ விதைத்து போன மரண விதியால் புதைந்து போனது உம் நினைவுகள் மட்டுமல்ல நாமும் தான் ஓராண்டு போனாலும் உம் நினைவால் வாடி வதங்குதம்மா நம் குடும்பம் எங்கள் உயிர் உள்ளவரை எங்களோடு எங்களுக்குள்ளேதான் வாழ்வீர்கள் உங்கள் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் - குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 27 03 1954 — இறப்பு 19 02 2020

**சி. விநாயகம் பெருமாள்**
**(அன்ரனி கணேசன்)**

[வவுனியா]

மண்ணுலகில் வாழ்ந்த வாழ்க்கை போதுமென்ற
இறைவனின் எண்ணத்தால் இறைவனடி சேர்ந்தீரய்யா
நேர்மை வழியில் நீர் பெற்ற நல்வாழ்வை எமக்கும்
வாழ்ந்து காட்டினீரய்யா
உம் ஆன்மா விண்ணகத்தில் இன்பம் பெற செபிக்கின்றோம்
கண்ணீருடன்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 06 1981 — உதிர்வு 22 03 2019

**திருமதி. யேசுதா**

(பாலைபெருமாள்கட்டு)

உம்மோடு நாமிருந்தது அழகானதொரு காலமம்மா!
அவை ஒவ்வொன்றும் உங்கள் அன்பினில் கரைந்திட்ட
மறக்க முடியாத இனிமையான நாட்களம்மா!
ஒரு பொழுதும் உமைப் பிரியாமல் பாசமுடன் வளர்த்தீர்கள்
இன்று எமைப் பிரிந்து எப்படியம்மா இருக்கிறீர்கள்
பார்த்துப் பார்த்து ஆசையாய் வளர்த்து விட்டு தவிக்க விட்டு
விட்டீர்கள் அம்மா! இன்று எல்லாம் இருந்தும் அம்மா
என்றழைக்க நீங்கள் இல்லையே...

என்றும் உங்கள் பிரிவால் நினைந்துருகும்
அன்பு கணவன், பிள்ளைகள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 06 2000 — மறைவு 30 01 2020

**செல்வன்.வறுண் கியூமன்**

(புதுக்கமம், உயிலங்குளம்)

நேற்று போல் உள்ளதய்யா உன் பிரிவு...
விலைமதியாச் செல்வமொன்று விண்ணேறிச் சென்ற நாளோ!
காலங்கள் விரையக் கடந்ததய்யா முப்பத்தொரு நாட்கள்!
நீ அன்னை மடி திறந்து விட்டு இன்று இறைவன் அடி சேர்ந்ததேனோ?
புன்னகை உன் செல்வமையா அதை எம்முள் புதைத்து விட்டாயோ!
உன் நினைவு கொண்டே எம் துயர் நீக்கி எம்மை விட்டுச் சென்றாயோ!
உன் ஆன்மா அமைதியில் இளைப்பாற வேண்டுகிறோம்
இறைவனிடம் அது நிலைபெற.

பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 08 1934 — உதிர்வு 27 03 2015

**திரு.பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்**

(இளைப்பாறிய அதிபர் - முத்தரிப்புத்துறை)

மறக்கமுடியாத ஞாபகம் நீங்கள், வெறுக்க முடியாத உணர்வு நீங்கள், குழந்தையிலே எம்மை தோள்களில் சுமந்தீர், இளமையிலும் தோழனாய் தோள் கொடுத்தீர், அழியாத கல்வியை அனைவருக்கும் தந்தீர், புன்னகைப் பார்வையில் அனைத்தும் உணர்ந்தினீர். நெற்றியில் சிலுவையிட்டு நாளும் ஆசி தந்தீர், ஆறுதல் அளித்திட அனைவரும் இருந்தாலும் ஐயா நீங்கள் இல்லையே... உங்கள் இருக்கையை கடக்கும் போதெல்லாம் நீங்கள் இருப்பதாய் உணர்கின்றோம். மரணம் உங்களுக்கு மட்டும் விதிவிலக்காய் இருந்திருக்க கூடாதா? இறைவனை இறைஞ்சுகின்றோம் அமைதியில் இளைபாறிடவே

பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள்.

## ஈராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 13 03 1950 — இறப்பு 04 04 2018

**அமரர்.திருமதி.எ.வீ.மரியபத்திமா**

(பெரியநாவற்குளம், திருக்கேதீஸ்வரம்)

ஆண்டுகள் இரண்டு ஆன போதும் ஆறவில்லை எம் துயரம் அம்மா
கண்மணி போல எம்மைக் கண்கலங்காமல் காத்தீர்கள் அம்மா
உங்கள் நினைவுகள் எம் உணர்வோடு வாழ்கின்றது அம்மா
விழிப்பிலும் கனவிலும் உங்கள் இன்முகம் என்றும் நீங்காது அம்மா
இறைவன் சந்நிதியில் எமக்காக என்றும் வேண்டுங்கள் அம்மா
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதி காண
இறைவனை இரஞ்சி வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மன்னா பத்திரிகை"
"மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 0763801841
Email. mannamnrc@gmail.com / Fb- Mannar Catholic Media

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார். தொ.இல: 023-2223674
Email. mannarcatholicpress@gmail.com
சகலவிதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும், தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org